කාර්ය සාධන වාර්තාව

செயலாற்றுகை அறிக்கை

Performance Report

2023





කිලිනොච්චිය දිස්ත්‍රික් ලේකම් කාර්යාලය

கிளிநொச்சி மாவட்ட செயலகம்

Kilinochchi District Secretariat





வருடாந்த செயற்திறன் மற்றும் நிதியறிக்கை

2023

உள்ளடக்கம்

	மாவட்ட செயலாளரின் ஆசியுரை	1-2
	மாவட்ட செயலக முகாமைத்துவம்	3-4

01. நிறுவன விபரம்

1.1	கிளிநொச்சி மாவட்ட அறிமுகம்	5
1.1.1	நிர்வாக எல்லைகள்	5
1.1.2	வரலாற்று முக்கியத்துவங்கள்	6
1.1.3	இயற்கை வளங்கள்	6
1.1.4	வர்த்தக பொருளாதார செயற்பாடுகள்	6
1.2	மாவட்ட செயலகத்தின் தொலை நோக்கு செயற்பணி பெறுமதிகள்	7
1.2.1	பிரதான செயற்பாடுகள்	8
1.3	வினைத்திறனான செயற்பணிகள்	8-9
1.4	அமைப்பு வரைபடம்	10
1.5	மாவட்டத்தின் பிரதேச செயலகங்கள்	11
1.5.1	சனத்தொகை பற்றிய தகவல்	11
1.5.2	அடிப்படைத் தகவல்கள்	11

02. முன்னேற்ற மற்றும் எதிர்கால கண்ணோட்டம்

2.1	சிறப்பு அடைவுகள் மற்றும் சவால்கள்	12-15
2.2	கிராம அபிவிருத்தி சேவைகள்	16-17
2.3	நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள்	17-18
2.4	மகளிர் சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுவூட்டல்	19
2.5	சிறு தொழில் முயற்சி அபிவிருத்திகள்	19-23
2.6	தேசிய அனர்த்த நிவாரண சேவைகள்	23-24
2.7	உள்ளக கணக்காய்வுக் செயற்பாடுகள்	24-26
2.8	காணி உபயோகக் கொள்கைத் திட்டமிடல்	26
2.9	அஸ்வெசும நலன்புரி நன்மைகள்	27
2.10	கலாச்சார அலுவல்கள் சேவைகள்	28-30
2.11	தொகை மதிப்பு புள்ளிவிபர் சேவைகள்	30-31
2.12	திட்டமிடல் செயற்பாடுகள்	31-35
2.13	மாவட்ட அனர்த்த முகாமைத்துவம்	35-37
2.14	சமூக சேவைகள்	37-39
2.15	விவசாய சேவைகள்	39-41
2.16	மோட்டார் போக்குவரத்து சேவைகள்	41-42
2.17	மாவட்ட பதிவாளர் அலுவலக சேவைகள்	44

2.18 சமூர்த்தி அபிவிருத்தி சேவைகள் 44
2.19 மொழிகள் அபிவிருத்தி 45-46
2.20 பெறுகை திட்டம் 47
2.21 நிதி நடவடிக்கைகள் 48-49

03.டிசம்பர் 31 முடிவுற்ற வருடத்திற்கான ஒட்டுமொத்த நிதிச்செயலாற்றுகை

3.1 நிதிச்செயலாற்றுகை பற்றிய கூற்று 50
3.2 நிதி நிலமைபற்றிய கூற்று 51
3.3 காசுப்பாய்ச்சல் கூற்று 52
3.4 நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புகள் 53-78
3.5 வருமான சேகரிப்பு செயலாற்றுகை 79
3.6 ஒதுக்கீட்டுப் பயன்பாட்டின் செயலாற்றுகை 80
3.7 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களின் செயற்பாடுகள் 80-88
3.8 நிதி அல்லாத சொத்து அறிக்கையிடல் செயலாற்றுகை 89
3.9 கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை 90-101

04. செயலாற்றுகை சுட்டிகள்

4.1 நிறுவனத்தின் செயலாற்றுகைச் சுட்டிகள் 102

05. பேண்தகு அபிவிருத்தி இலக்குகள்

5.1 அடையாளம் காணப்பட்ட பேண்தகு அபிவிருத்தி இலக்குகள் 103
5.2 பேண்தகு அபிவிருத்தி இலக்குகளின் அடைவுகள் மற்றும் சவால்கள் 104-106

06. மனித வள விபரம்

6.1 பதவியணி முகாமைத்துவம் 107
6.2 மனிதவள அபிவிருத்தி 108

07. இணக்கப்பாட்டு அறிக்கைகள்

1.	நிதி அறிக்கைகள்/ கணக்குகள் சமர்ப்பிப்பு	109-116
2.	புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளைப் பேணல் (நி.பி 445)	
3.	நிதிக்கட்டுப்பாட்டுக்கான பணிகளை ஒப்படைத்தல் (நி.பி 135)	
4.	வருடாந்த திட்டம் தயாரித்தல்	
5.	கணக்காய்வு ஜயவினாக்கள்	
6.	உள்ளக கணக்காய்வு	
7.	கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு	
8.	சொத்து முகாமைத்துவம்	
9.	வாகன முகாமைத்துவம்	
10.	வங்கிக்கணக்குகளின் முகாமை	
11.	நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்தல்	
12.	அரச அலுவலர்களின் முற்பணக்கணக்கு	
13.	பொது வைப்புக்கணக்கு	
14.	முற்பணக்கணக்கு	
15.	வருமானக்கணக்கு	
16.	மனித வள முகாமைத்துவம்	
17.	பொதுமக்களுக்கான தகவல் வழங்கல்	
18.	பிரசைகள் பட்டயத்தினைச் செயற்படுத்தல்	
19.	மனித வளத்திட்டத்தினைத் தயாரித்தல்	
20.	கணக்காய்வு பந்திகளுக்கான பொறுப்புக்கள்	

மாவட்ட செயலாளரின் ஆசியுரை

2023ம் ஆண்டு நாட்டின் வரலாற்றில் மிகப்பெரும் பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்ட வேளையில் மக்களின் வாழ்க்கை இயல்பு நிலைக்கு கொண்டு வருவதற்கு தொடர்ந்து முயற்சிகளை மேற்கொள்ள வேண்டிய ஆண்டாக குறிப்பிடலாம். இந்த வகையில் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தின் 2023ம் ஆண்டிற்கான வருடாந்த செயற்திறன் அறிக்கை மற்றும் நிதியறிக்கையினை கையளிக்கின்றேன். இந்த அறிக்கையானது அரசாங்கத்தால் அமுல்படுத்தப்பட்ட செயற்திட்டங்களை உருவாக்குகின்ற மற்றும் செயற்படுத்தல் நடவடிக்கையின் பொருட்டு திறைசேரியினால் 2023ம் ஆண்டிற்காக ஒதுக்கப்படுகின்ற ஒதுக்கீடுகள், கட்டுநிதிகள் என்பன மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களில் எவ்வாறு சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் பயன்படுத்தப்படுகின்றது என்பதனை தெளிவாக எடுத்துரைக்கின்றது.

மாவட்டத்தின் பொருளாதார சமூக மன மற்றும் ஆன்மீக வளர்ச்சிக்கு பங்களிக்கும் ஆரோக்கியமான மாவட்டத்திற்கான நவீன மயப்படுத்தப்பட்ட மாவட்ட நிர்வாகத்தின் ஊடாக பயனுறுதிமிக்க மக்கள் சேவையை வழங்க வேண்டும் என்ற தொலைநோக்கு பார்வையுடன் 2023 ஆம் ஆண்டில் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டம் மற்றும் கிராமத்துடனான அபிவிருத்தி நிகழ்ச்சி திட்டங்கள் ஊடாக பல்வேறு வேலைத்திட்டங்கள் மாவட்டத்தில் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவை மாத்திரமன்றி கிராம அபிவிருத்தி, அனர்த்த முகாமைத்துவம், சமூக சேவை மற்றும் சிறுவர் பெண்கள் பிரிவினரால் பொதுமக்கள் நலன்கருதி பல்வேறுபட்ட செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

வடமாகாணத்தின் மையப்பகுதியில் அமையப்பெற்ற கிளிநொச்சி மாவட்டமானது கரைச்சி, கண்டாவளை, பூநகரி, பச்சிலைப்பள்ளி என்னும் நான்கு பிரதேச செயலகப் பிரிவுகளைக் கொண்டுள்ளது. இம் மாவட்ட மக்களின் பிரதான ஜீவனோபாயமாக விவசாயம் திகழ்வதுடன் மீன்பிடி,பனை மற்றும் தெங்கு சார்ந்த பொருட்கள் உற்பத்தி மற்றும் பல்வேறு சுயதொழில்களிலும் ஈடுபட்டு வருகின்றனர். இலத்திரனியல் மயப்படுத்தப்பட்ட அலுவலக செயற்பாடுகள் மூலமாக மக்களுக்கு வினைத்திறனான சேவைகள் வழங்கப்படுவதுடன் இது சார்ந்த பல பயிற்சிகள் அலுவலர்களுக்கு தொடர்ச்சியாக வழங்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. அத்துடன் தேசிய உற்பத்தி திறன் போட்டியில் இரண்டு தடவைகள் முதலாம் இடத்தினை பெற்ற மாவட்ட செயலகம், கிளிநொச்சி அடுத்து தங்க விருதினைப்பெறும் வகையிலான உற்பத்தி திறன் செயற்பாடுகளை செவ்வனே மேற்கொள்கிறது. மேலும் வருடாந்த பாராளுமன்றத்தினால் நடாத்தப்படும் செயலாற்றுகை குறிகாட்டிகளின் மதிப்பீட்டின் படி 2021ம் ஆண்டு நிதியாண்டிற்கான மதிப்பீடுகளின்படி பகுதி I ஆன நிதிச்செயற்பாடுகளுக்கு 100 புள்ளிகளும் நிர்வாக மற்றும்

திட்டமிடல் செயற்பாடுகளுக்கு 90 புள்ளிகளும் சராசரியாக 95 புள்ளிகளும் பெற்று எமது மாவட்ட செயலகம் தேசிய ரீதியில் 2ம் இடத்தினை பெற்றுக்கொண்டது. அத்தோடு எம்மால் மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்களின் அடைவு மட்டத்தினை இனம் காணும் பொருட்டு கேள்விக் கொத்துக்கள் தயாரிக்கப்பட்டு மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்களிற்கு இடையில் "பிரதான செயலாற்றுகை குறிகாட்டிகளின் மதிப்பீடு" நடாத்தப்பட்டு தரவரிசைப்படுத்தப்பட்டு விருதுகள் வழங்கி வைக்கப்பட்டது. மற்றும் இலங்கை பட்டய கணக்கறிஞர் நிறுவனத்தினால் 7வது (APFASL) விருது வழங்கும் நிகழ்வில் 2022ம் நிதியாண்டிற்கான சிறந்த நிதி அறிக்கைக்கான தங்க விருதினையும் பெற்றுக் கொண்டது.

மேலும் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவினரால் பல்வேறு உத்தியோகத்தர்களுக்கான அனர்த்த முகாமைத்துவ செயலமர்வுகள் மற்றும் வடகீழ்ப்பருவக்காற்று மழை மற்றும் மொன்டஸ் புயலின் போதான பதிலிறுத்தல் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. சிறுவர்கள், பெண்கள், முதியோர் போன்ற பல்வேறு பிரிவினருக்குரிய உதவித்திட்டங்கள் அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் நிதிப்பங்களிப்புடன் மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

கிளிநொச்சி மாவட்ட மக்களின் வாழ்வாதார மேம்பாடு மற்றும் எமது மாவட்டத்தை நிலைபேறான அபிவிருத்திக்கு இட்டுச் செல்வதை இலட்சியமாகக் கொண்டு சிறந்த பொதுமக்கள் சேவையை வழங்குவதே எமது நோக்காகும். அத்தோடு 2022 ஆம் ஆண்டு 24 ஆம் இலக்க நலன்புரி நன்மைகள் சட்டத்துக்கமைய 2022 ஆம் ஆண்டு ஒக்டோபர் 20ஆம் திகதி 2302/23 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் ஊடாக வெளியிடப்பட்ட அமைச்சரவை அனமதியுடனான நலன்புரி கொடுப்பனவுகளை பகிர்ந்தளிக்கும் கட்டளைகளை திருத்தம் செய்து அமுல்படுத்தப்பட்ட 2022 டிசம்பர் 15 ஆம் திகதி 2310/30 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் அறிவுறுத்தலுக்கமைய அஸ்வெசும நலன்புரி நன்மைகள் வேலைத்திட்டம் செயற்படுத்தப்பட்டு பாதிக்கப்படக்கூடிய வறுமையான குடும்பங்களை சென்றடையும் முகமாக கொடுப்பனவுகள் வழங்கப்பட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

கிளிநொச்சி மாவட்ட மக்களின் வாழ்வாதார மேம்பாடு மற்றும் எமது மாவட்டத்தை நிலைபேறான அபிவிருத்திக்கு இட்டுச் செல்வதை இலட்சியமாகக் கொண்டு சிறந்த பொதுமக்கள் சேவையை வழங்குவதே எமது நோக்காகும்.

திரு. சுப்பிரமணியம் முரளிதரன்
மாவட்ட செயலாளர் (பதில்)
கிளிநொச்சி

சு.முரளிதரன்
அரசாங்க அதிபர்/
மாவட்டச் செயலாளர் (பதில்)
கிளிநொச்சி மாவட்டம்.

30.05.2024

மாவட்ட செயலக முகாமைத்துவம் 2023

District Secretary
Mrs. Rubawathy Ketheeswaran
SLAS Spl. Grade, B.Sc, MPA

Addl. District Secretary
Mr. Subramaniyam Muralitharan
SLAS I, MA in POP Devt, LLB

Addl. District Secretary (Land)
Mrs. Nalagene Inparaj
SLAS I, MA in PA

Chief Accountant
Mr. Sivagnanam Kajenthiran
SLACS I, BBA(Spl)Hons, PGDM, Dip in Eng, SNLOP
Dip in Proc, MBA, CPFA, CIPFA(UK)

Director of Planning
Mr. Krishnar Sribaskaran
SLPS I, B.A (Hons), MA in RP, Dip in

Chief Internal Auditor
Mrs. Kumuthini Niranjan
SLACS I, B.Com.

District Director of Agriculture
Mr. Arulampalam Selvarajah
SLAgS, B.Sc in Ag (Hons), M.Sc in NRM

Accountant
Mr. Vadivel Suthakaran
SLACS II, BBA, MBA

Asst. District Secretary
Mrs. Saththijajeevitha Hariramanan
SLAS III, B.Sc,

Asst. Director of Planning
Mr. Amarasingam Ketheeswaran
SLPS III, B.A(Hons) M.Phil in Ec, Dip in Pl,

District Engineer
Mr. Kamalanathan Divakar
SLES III, B.E, M.E, AMIE (SL)

District Statistician
Mr. Manuel Viththiyananthanesan
SLSS I B.Sc, Dip in PS, Dip in OR, M.Phil

Director of Samurthi
Mrs. Aarani Thavabalan
SLAS III, B.A

District Director of DMC
Mr. Sinniah Kokularajah
M.Sc

District Register
Mrs. Susitha Thivakaran
B.Sc (Hons)

Mr. Iyathurai Pirem
B.A (Hons)

Administrative Officer
Mrs. Arunthavarani Manikkarasa
MSO-Supra

மாவட்ட செயலக முகாமைத்துவம் 2023




01. நிறுவனத்தின் விபரங்கள்

1.1 கிளிநொச்சி மாவட்ட செயலகத்தின் அறிமுகம்

1.1.1 நிர்வாக எல்லைகள்

வட மாகாணத்தின் மத்தியில் அமைந்திருக்கும் கிளிநொச்சி மாவட்டமானது வடக்கு எல்லையாக யாழ்மாவட்டமும், கிழக்கு தெற்கு எல்லைகளாக முல்லைத்தீவு மாவட்டமும், மேற்கு, தெற்குஎல்லைகளாக மன்னார் மாவட்டத்தையும் கொண்டுவிளங்குகின்றது.



1.1.2 வரலாற்று முக்கியத்துவங்கள்

இலங்கையின் முதலாவது மனிதக்குடியிருப்பின் தொடக்கப் புள்ளியாக இரணைமடு அடையாளப்படுத்தப்பட்ட தன் மூலம் கிளிநொச்சி மாவட்டத்தினது வரலாற்று தொண்மை ஆரம்பமாகின்றது. யாழ்ப்பாண மாவட்டத்துடன் இணைந்து காணப்பட்ட கிளிநொச்சி பிரதேசம் புதிய மாவட்டம் ஒன்றாக 1984ம் ஆண்டு நிறுவப்பட்டது. அக்காலத்தில் கிளிநொச்சி மாவட்டத்தில் வாழ்ந்த மக்கள் விவசாயம், வேட்டைத்தொழில், மீன்பிடி, கால்நடை வளர்ப்பு ஆகிய தொழில்களை மேற்கொண்டதுடன் அவற்றைசேமிக்கும் பழக்கங்களையும் கொண்டிருந்தனர்.

இம் மாவட்டத்தில் காணப்படுகின்ற இரணைமடுக்குளம் உட்பட நான்கு பாரிய நீர்ப்பாசனக்குளங்களும் ஐந்து நடுத்தர நீர்ப்பாசனக்குளங்களும் 394 சிறிய நீர்ப்பாசன குளங்களும் இம் மாவட்டத்தில் அமைந்துள்ளமை மக்களின் தொழில் முறையை எடுத்தியம்புகிறது. மேலும் தொழில் நுட்பமும் கலை நயமும் பொருந்திய மக்கள் இங்கு வாழ்ந்ததாக நம்பப்படுகிறது.

இம் மாவட்டத்தின் வரலாற்று பெருமைகளாக உருத்திரபுரம் சிவன் கோயில், புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலயம், மண்ணித்தலை புனித அந்தோனியார் ஆலயம், பாலைதீவு புனித அந்தோனியார் தேவாலயம், பொன்னாவெளி சிவன் ஆலயம் என்பவற்றுடன் பூநகரி ஒல்லாந்தர் கோட்டையும் காணப்படுகின்றது.

1.1.3 இயற்கை வளங்கள்

இயற்கை வளங்களாக இரணைமடுக்குளம், சுண்டிக்குளம் பறவைகள் சரணாலயம், வன்னேரிக்குளம் பறவைகள் சரணாலயம் மற்றும் கௌதாரிமுனை கடற்கரை என்பவை விளங்குகின்றன.

1.1.4 வர்த்தக பொருளாதார செயற்பாடுகள்

கிளிநொச்சி மாவட்ட மக்களின் பெரும்பாலானவர்கள் நெற்செய்கையுடன் உப உணவுப் பயிர்ச்செய்கை கால்நடைவளர்ப்பு, பழமரச் செய்கை மற்றும் மீன்பிடித் தொழில் என்பவற்றை மேற்கொள்கின்றனர்.

1.2 மாவட்ட செயலகத்தின் தொலைநோக்கு செயற்பணி பெறுமதிகள்

தூரநோக்கு

நவீன மயப்படுத்தப்பட்ட மாவட்ட நிர்வாகத்தினூடாக பயனுறுதி மிக்க மக்கள் சேவையை வழங்கல்

செயற்பணி

அரச கொள்கைகளுக்கு அமைவாக வினைத்திறனைப் பயன்படுத்தி சிறந்த ஒருங்கிணைப்பின் மூலம் மாவட்டத்தின் அபிவிருத்தி மற்றும் சமூக பண்பாட்டு விழுமியங்களை

பெறுமதிகள்

1. பாகுபாடற்ற நேர்மையான பயனுறுதி மிக்க விரைவான மக்கள் சேவையை வழங்கல்.

2.ஒரே பதவி நிலையில் உள்ள ஊழியர்கள் சமமாக மதிக்கப்படுவதுடன், ஊழியர்களின் நலன்சார் விடயங்களுக்கு முன்னுரிமை அளித்தல்.

3.சூழல் நட்பு அணுகு முறைகளைப் பயன்படுத்துதல்

4.மாற்று வலுவுள்ளோர், முதியோருக்கான கண்ணியமான சேவையினை வழங்கல்.

5.அலுவலகத்தில் பின்பற்றப்படும் கோட்பாடுகள் மற்றும் நெறிமுறைகளை ஊழியர்கள் அனைவரும் பின்பற்றுதல்.

6.நவீன இலத்திரனியல் முறைமையினூடாக பொதுமக்களிற்கு இலகுவான சேவை வழங்கல்.

1.2.1 மாவட்ட செயலகத்தின் நோக்கங்கள்

- தரவுகளை இலத்திரனியல் மயப்படுத்துதலினூடாக இலகுவான மக்கள் சேவையினை முன்னெடுத்தல்.
- வினைத்திறனான வளப்பயன்பாடு
- சேவை பெறுநர் மற்றும் வளங்களினுடைய உற்பத்தித்திறனை உச்சமட்டத்திற்கு கொண்டு செல்லல்.
- சூழல்நேயஉற்பத்திப் பொருட்களைப் பயன்படுத்துதல்.
- மக்களுக்கு இலகுவானதும் வினைத்திறனானதுமான சேவையை வழங்கக் கூடியவகையில் அலுவலகத்தை ஈர்ப்பு மற்றும் தக்கவைத்தல் நிலைக்கு கொண்டு வருதல்.
- மாவட்ட மக்களின் வாழ்க்கைத் தரத்தை தேசியவாழ்க்கைத் தரமட்டத்திற்கு சமமாக உயர்த்துதல்.
- சமூர்த்தி அடிப்படைக் கட்டுமான விருத்தி, தொழில் வாய்ப்பு போன்ற செயற்திட்டங்களின் ஊடாக வறுமையினைக் கணிசமானஅளவுகுறைத்தல்.
- வாழ்வாதார உதவிகள் மூலம் நிலைபேறான வருமான மட்டத்தை உறுதிப்படுத்தல்.
- நிறுவனத்திற்கான மாற்ற முகாமைத்துவத்தினைக் கட்டியெழுப்புதல்.
- நிறுவனத்தின் நிலைத்திருப்பு வளர்ச்சியினை அடைந்து கொள்ளல்.
- பேண்தகு அபிவிருத்தி மட்டத்தை தொடர்ச்சியாக உறுதிப்படுத்துதல்.

1.3 வினைத்திறனான செயற்பணிகள்

வினைத்திறனான மாவட்ட நிர்வாக முறைமை

- மாவட்ட செயலக மற்றும் பிரதேச செயலகங்களிற்கான கணினி வலையமைப்புக்கள், உள்ளக கணினி வலையமைப்பு முறைகள் வெளியக வலையமைப்புக்கள் என்பவற்றை ஏற்படுத்தல்.
- உத்தியோகத்தர்கள் தொடர்பான தனிநபர் கோவைகளை பேணுதல்,சம்பளம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகள்,புகையிரத ஆணைச் சீட்டுகள் வழங்கல், உத்தியோகத்தர்களின் பதவிகளிற்கு தேவையான பயிற்சிகளை வழங்கல்.
- ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்களிற்கான ஓய்வூதிய கொடுப்பனவுகளை மேற்கொள்ளல்.

தூயபொதுச் சேவைகளை கிராம, பிரதேச மற்றும் மாவட்ட பொது மக்களிற்கு வழங்குவதும், வழங்கப்படுவதை உறுதிப்படுத்தலும் .

- அடையாளஅட்டைகள் மோட்டார் வாகன வரி வியாபாரஅனுமதிப் பத்திரங்கள் வழங்கல்.
- பிறப்பு இறப்பு மற்றும் திருமண பதிவுகளைதாமதமின்றி மேற்கொள்வதும் அவற்றின் பிரதிகளை வழங்குதலும்.
- சாரதி அனுமதிப்பத்திரம் வழங்குதல்.
- காணி அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கான ஒழுங்குகளை மேற்கொள்ளலும், காணிப்பிரச்சனைகளை தீர்த்து வைத்தலும்.
- கலாச்சார விழுமியங்கள் மற்றும் உடல் உளசார் நலன் பேணல்.


- கலைகலாச்சார விழாக்களை நடாத்துதல், கலைகலாச்சாரம் சம்பந்தமான போட்டிகளை நடாத்துதல், கலாச்சாரம் சம்பந்தமான விளையாட்டு நிகழ்வுகளை நடாத்துதல்.
- மாவட்ட விளையாட்டு நிகழ்வுகள்மற்றும் மாற்றுத் திறனாளிகளிற்கான விளையாட்டு நிகழ்வுகள் நடாத்துதல்.
- சிறந்த பிரஜைகளை உருவாக்குவதற்கு ஏதுவான வகையில் சிறுவர்கள் இளைஞர்களிற்கான விழிப்புணர்வு கருத்தரங்குகளை நடாத்துதல், உளவள மேம்பாட்டிற்கான கருத்தரங்குகள் நடாத்துதல்.

கிராம பிரதேச மட்டங்களில் உள்ள மக்களின் கல்வி,சுகாதாரம், விவசாயம் போன்றவற்றிற்கு உதவுவதுடன் வறுமைக் கோட்டிற்குட்பட்டவர்களிற்கு நிவாரணங்களும் வாழ்வாதார உதவிகளும் வழங்கல்.

- பெண் தலைமைத்துவ குடும்பங்களிற்கு சுயதொழில் பயிற்சிகள், ஊக்குவிப்புக்களை வழங்குதல்.
- முதியோர்கள், மாற்றுத்திறனாளிகளிகள் மற்றும் விசேட நோய் உடையோருக்குமான கொடுப்பனவுகள் மேற்கொள்ளுதல்.
- அனர்த்த முகாமைத்துவ சேவை பிரிவினால் கிராமிய மட்டங்களில் திடீர் அனர்த்தம் சம்பந்தமான விழிப்புணர்வு கருத்தரங்குகளை நடாத்துதல் அனர்த்த நிவாரண சேவைகளை உரிய நேரத்தில் மேற்கொள்ளல்.
- வாக்காளர் பதிவுகளை மேற்கொள்ளலும், தேர்தல் ஒருங்கிணைப்பும்.
- விவசாயிகளிற்கான விதைகள்,உள்ளீடுகள் மற்றும் விவசாய உபகரணங்களை பெற்றுக்கொடுத்தல்.

வீதி அபிவிருத்தி,நீர்ப்பாசன, மின்சாரவசதிகளை ஒழுங்கமைத்தல், வீடமைப்புதிட்டங்களை நெறிப்படுத்துதல்,யுத்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களிற்கான இழப்பீட்டுத் தொகை வழங்கல் மற்றும் மாவட்டத்தின் அனைத்து அபிவிருத்தி நடவடிக்கைகளையும் ஒழுங்கமைத்து வழிப்படுத்தல்.

1.4 மாவட்ட செயலக அமைப்பு வரைபடம்



1.5 பிரதேச செயலகங்கள், கிராம அலுவலர் பிரிவு விபரங்கள்

பிரதேச செயலர் பிரிவு	கிராம அலுவலர் பிரிவு
கரைச்சி	42
கண்டாவளை	16
பூநகரி	19
பச்சலைப்பள்ளி	18

1.5.1 சனத்தொகை பற்றிய தகவல்

தொ. இல	பிரதேச செயலகங்கள்	குடும்பங்கள்	உறுப்பினர்கள்	ஆண்	பெண்	தமிழர்	சிங்களவர்	முஸ்லீம்
01	கரைச்சி	27,357	78,762	38,026	40,736	77,810	93	859
02	கண்டாவளை	9,368	27,810	13,565	14,245	27,783	2	25
03	பூநகரி	8,555	27,987	13,997	13,990	26,276	8	1703
04	பச்சிலைப்பள்ளி	4,852	14,880	7,330	7,550	14,829	24	27
மொத்தம்		**50,132**	**149,439**	**72,918**	**76,521**	**146,698**	**127**	**2,614**

1.5.2 அடிப்படைத் தகவல்கள்

மாவட்டம்	கிளிநொச்சி
மாகாணம்	வடக்கு
மொத்தப் பரப்பளவு	1279 sqkm
கிராம அலுவலர் பிரிவுகளின் எண்ணிக்கை	95
கிராமங்களின் எண்ணிக்கை	354
வாக்கெடுப்பு நிலையங்களின் எண்ணிக்கை	95
பிரதேச சபைகளின் எண்ணிக்கை	03
வலயக்கல்விப் பணிமனைகள் எண்ணிக்கை	02
பாடசாலைகளின் எண்ணிக்கை	104
மாணவர்களின் எண்ணிக்கை	29,118
ஆசிரியர்களின் எண்ணிக்கை	2,119
சனத்தொகை	148,452

02. முன்னேற்றம் மற்றும் எதிர்கால கண்ணோட்டம்

2.1 சிறப்பு அடைவுகள் மற்றும் சவால்கள்

❖ தேசிய மட்டம்

கிளிநொச்சி மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்கள் ஆகியவற்றுக்கு இடையில் 2022 நடாத்தப்பட்ட பிரதான செயலாற்றுகை குறிகாட்டிகளின் மதிப்பீடு 2022 இற்கான விருது வழங்கும் நிகழ்வு 2023 நடைபெற்றது. குறித்த நிகழ்வு கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி.றூபவதி கேதீஸ்வரன் அவர்களின் தலைமையில், மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

பிரதான செயலாற்றுகை குறிகாட்டி (KPI) மதிப்பீட்டின் போது "நிதி முகாமைத்துவம், பொது நிர்வாகம், திட்டமிடல் மற்றும் கணக்காய்வு தொடர்பான விடயப்பரப்புகளில் 126 குறிகாட்டிகள் மதிப்பிடப்பட்டன. " குறிப்பாக, பொது மக்கள் சேவைகள், சேவைகள் பட்டயம், தகவல் பெறுதல் உரிமை, அபிவிருத்தி நடவடிக்கைகள், மனித வள முகாமைத்துவம், பொதுக் கணக்குகள் குழுவின் விதந்துரைகளை அமுல்படுத்துதல், சொத்துக்களை வெளிப்படுத்துதல், நட்டங்களை முகாமை செய்தல், உத்தியோகத்தர்கள் இடமாற்றம், கணக்குகள் சமர்ப்பித்தல்கள், பதிவேடுகள் பராமரிப்பு, அதிகார கையளிப்பு, சம்பளபொதி கையாள்கை, செயற்பாட்டு திட்டம், பெறுகைகள் கையாள்கை, கட்டுநிதி முகாமை, கணக்காய்வு நடவடிக்கைகள், வங்கி நடவடிக்கைகள், உத்தியோகத்தர்கள் கடன் பராமரிப்பு, வைப்பு கணக்குகள் பராமரிப்பு, ஒதுக்கீடுகளும் செலவீனங்களும், உபகட்டுநிதி, வருமான கணக்குகள் முகாமைத்துவம், வருடாந்த செயற்பாட்டு அறிக்கைகள் உள்ளடங்கலாக பிரதான செயலாற்றுகை பரப்பெல்லையுள் (KPI) 126 குறிகாட்டிகளும் அமையப்பெற்றிருந்தமை குறிப்பிடதக்கது.

குறித்த பிரதான செயலாற்றுகை குறிகாட்டிகளின் மதிப்பீட்டுக் குழுவின் அங்கத்தவர்களாக முல்லைத்தீவு மாவட்டசெயலக பிரதம உள்ளகக் கணக்காய்வாளர் க.லிங்கேஸ்வரன், யாழ். வேலணை பிரதேச செயலாளர் கை.சிவகரன், வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் திட்டமிடல் பணிப்பாளர் ச.மோகன்பவன் ஆகியோர் உள்ளடங்கிய குழு நியமிக்கப்பட்டு மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. அதனடிப்படையில் கிளிநொச்சி மாவட்ட செயலகம் 82.33 புள்ளிகளைப் பெற்று முதலிடத்தையும், பூநகரி பிரதேச செயலகம் 80.55 புள்ளிகளைப் பெற்று இரண்டாமிடத்தினையும் பெற்றுக் கொண்டமைக்காக "EXCELLENT ACHIVEMENT" விருது வழங்கி கௌரவிக்கப்பட்டிருந்தனர்.

மேலும், கண்டாவளை பிரதேச செயலகம் 77.00 புள்ளிகளைப் பெற்று மூன்றாமிடத்தையும், கரைச்சி பிரதேச செயலகம் 74.83 புள்ளிகளைப் பெற்று நான்காமிடத்தையும் பெற்றுக் கொண்டமைக்காக "GOOD ACHIVEMENT " சான்றிதழ்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டிருந்தனர். பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகம் 68.75 புள்ளிகளைப் பெற்று ஐந்தாமிடத்தையும் பெற்றுக் கொண்டமைக்காக "AVERAGE ACHIVEMENT" சான்றிதழ்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டிருந்தனர்.

குறித்த போட்டி, கிளிநொச்சி மாவட்ட செயலகத்தை தேசிய அளவிலான பிரதான செயலாற்றுகை குறிகாட்டி(KPI) போட்டியில் பங்குபற்றி வெற்றிபெறுவதனை ஊக்கப்படுத்தும் நோக்கில் முன்னெடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இல	விருதின் பெயர்	யாரால் வழங்கப்பட்டது	விருது பெற்ற ஆண்டு	விருது பெற்ற திததி	இடம்
1	தேசிய உற்பத்தித்திறன் விருதுகள்	தேசிய உற்பத்தித்திறன் செயலகம்	2015	14.12.2016	இரண்டாமிடம்
2	2015 ம் நிதியாண்டின் பொதுக் கணக்குகள குழுவிற்கான மதிப்பீட்டுத் திட்டம்	இலங்கை பாராளுமன்றம்	2015	13.11.2017	சான்றிதழ் அங்கீகாரம்
3	தேசிய உற்பத்தித்திறன் விருதுகள்	தேசிய உற்பத்தித்திறன் செயலகம்	2018	26.03.2019	முதலாமிடம்
4	திறமை கொண்ட இளைஞர்கள்	தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் மற்றும் இலங்கை இளைஞர் கழகங்களின் கூட்டமைப்பு	2018		
5	“த்ருணு சிராம சக்தி” சமூக மேம்பாட்டுத் திட்டம்	தேசிய இளைஞர் சேவைகள் மன்றம்			
6	சித்ரு 2019	சுமூக சேவைகள் திணைக்களம்	2019		இரண்டாமிடம்
7	தேசிய உற்பத்தித்திறன் விருதுகள்	தேசிய உற்பத்தித்திறன் செயலகம்	2020	26.04.2022	முதலாமிடம்
8	Best Annual Reports and Accounts- 2022 in the public sector	Association of Public Finance Accountants of Sri Lanka	2022	14.12.2023	தங்க விருதுகள்
9	2021 ம் ஆண்டுக்கான KPI செயற்திறனை மதிப்பிடுதல்	இலங்கை பாராளுமன்றம்	2023		அனைத்து மாவட்டங்களிலும் இரண்டாமிடம்



❖ மாவட்ட / மாகாண மட்டம்

இல	விருதின் பெயர்	மாவட்டம் /மாகாணம்	விருது பெற்ற ஆண்டு	இடம்
1	மாவட்ட செயலக நலன்புரி Trophy	மாவட்டம்	2011	முதலாமிடம்
2	இலக்கியப் போட்டி	மாகாணம்	2012	இரண்டாமிடம்
3	பிரதேச விளையாட்டு விழா	மாவட்டம்	2014	முதலாமிடம்
4	அரச அதிபர் வெற்றிக்கிண்ணம் - 2014, கரப்பந்து (ஆண்கள்)	மாவட்டம்	2014	இரண்டாமிடம்
5	அரச அதிபர் வெற்றிக்கிண்ணம் - 2014, மென்பந்து (கலப்பு)	மாவட்டம்	2014	முதலாமிடம்
6	அரச அதிபர் வெற்றிக்கிண்ணம் - 2014, உதைபந்து (ஆண்கள்)	மாவட்டம்	2014	முதலாமிடம்
7	சர்வதேச மகளிர் தினம் 2016, பூப்பந்து	மாவட்டம்	2016	முதலாமிடம்
8	அரச அதிபர் வெற்றிக்கிண்ணம் - 2016, கயிறிழுத்தல் (பெண்கள்)	மாவட்டம்	2016	இரண்டாமிடம்
9	"Healthy Lifestyle Challenge Trophy" - 2016, Foot ball	மாவட்டம்	2016	முதலாமிடம்
10	Iranaimadu cup - 2017	மாவட்டம்	2017	Participation

11	அரச அதிபர் வெற்றிக்கிண்ணம் - 2017, சதுரங்கம் (பெண்கள்)	மாவட்டம்	2017	இரண்டாமிடம்
12	அரச அதிபர் வெற்றிக்கிண்ணம் - 2017, சதுரங்கம் (ஆண்கள்)	மாவட்டம்	2017	இரண்டாமிடம்
13	அரச அதிபர் வெற்றிக்கிண்ணம் - 2017, கரம் (பெண்கள்)	மாவட்டம்	2017	இரண்டாமிடம்
14	அரச அதிபர் வெற்றிக்கிண்ணம் - 2017, பூப்பந்தாட்டம் (ஆண்கள்)	மாவட்டம்	2017	இரண்டாமிடம்
15	அரச அதிபர் வெற்றிக்கிண்ணம் - 2017, பூப்பந்தாட்டம் (பெண்கள்)	மாவட்டம்	2017	முதலாமிடம்
16	அரச அதிபர் வெற்றிக்கிண்ணம் - 2017, கயிறிழுத்தல் (பெண்கள்)	மாவட்டம்	2017	இரண்டாமிடம்
17	துறைகளுக்க இடையேயான வருடாந்த கிரிக்கெட் போட்டி	மாகாணம்	2017	Winners
18	அரச அதிபர் வெற்றிக்கிண்ணம் - 2018	மாவட்டம்	2018	Overall Runner up
19	அரச அதிபர் வெற்றிக்கிண்ணம் - 2018, கரம் (ஆண்கள்)	மாவட்டம்	2018	முதலாமிடம்
20	அரச அதிபர் வெற்றிக்கிண்ணம் - 2018, கரம் (பெண்கள்)	மாவட்டம்	2018	முதலாமிடம்
21	அரச அதிபர் வெற்றிக்கிண்ணம் - 2018, பூப்பந்தாட்டம் (ஆண்கள்)	மாவட்டம்	2018	இரண்டாமிடம்
22	அரச அதிபர் வெற்றிக்கிண்ணம் - 2018, உதைபந்தாட்டம்	மாவட்டம்	2018	இரண்டாமிடம்
23	அரச அதிபர் வெற்றிக்கிண்ணம் - 2022	மாவட்டம்	2022	இரண்டாமிடம்
24	அரச அதிபர் வெற்றிக்கிண்ணம் - 2022, வலைப்பந்தாட்டம் (பெண்கள்)	மாவட்டம்	2022	இரண்டாமிடம்
25	அரச அதிபர் வெற்றிக்கிண்ணம் - 2022, உதைபந்தாட்டம்	மாவட்டம்	2022	இரண்டாமிடம்
26	அரச அதிபர் வெற்றிக்கிண்ணம் - 2022, கரப்பந்தாட்டம் (ஆண்கள்)	மாவட்டம்	2022	முதலாமிடம்
27	அரச அதிபர் வெற்றிக்கிண்ணம் - 2022, பூப்பந்தாட்டம் (ஆண்கள்)	மாவட்டம்	2022	இரண்டாமிடம்
28	மாவட்டங்களுக்கு இடையிலான செயலக உத்தியோகத்தர்களுக்கான நட்புறவு கிரிக்கெட் போட்டி	மாகாணம்	2023	இரண்டாமிடம்

29	துறைகளுக்கு இடையேயான போட்டி	மாவட்டம்	2023	Overall Champion
30	பிரதேச மட்டத்திலான செயல்திறன் குறிகாட்டிகளுக்கான மதிப்பீடு	மாவட்டம்	2023	
31	புதவிநிலை உத்தியோகத்தர்களுக்கான மென்பந்து போட்டி	மாகாணம்	2024	Participant

2.2 கிராம அபிவிருத்தி சேவைகள்

வடமாகாண சபையின் கீழ் இயங்கும் கிளிநொச்சி மாவட்ட கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் செயற்பாடுகளாக பின்வருவனவற்றைக் குறிப்பிட முடியும்.

- கிளிநொச்சி மாவட்டத்தின் நான்கு பிரதேச செயலர் பிரிவிலும் 173கிராம அபிவிருத்திச்சங்கங்களும், 164 மாதர் கிராம அபிவிருத்திச்சங்கங்களும் பதிவு செய்யப்பட்டு இயங்கி வருகின்றன. இவை அனைத்தும் கிராம மட்டத்தில் சிறப்பாக இயங்கும் சமூக மட்ட அமைப்பாக உள்ளன.

- கிளிநொச்சி மாவட்டத்தில் வேலை வாய்ப்பற்றிருக்கும் கிராமப்புற யுவதிகளை சுயதொழிலில் ஊக்குவிக்கும் முகமாகவும், பாடசாலைக் கல்வியை இடைநிறுத்தி வேலைவாய்ப்பை பெற்றுக்கொள்ள முடியாமல் இருக்கும் பெண்களுக்கும் உதவும் நோக்குடன் மகளிர் அபிவிருத்தி நிலையத்தினை நிறுவி மகளிர் அபிவிருத்தி நிலைய போதனாசிரியர் ஊடாக கிராமத்தில் பெண்கள்சார்பான பல தரப்பட்ட ஆடை வடிவமைத்தல், கைவேலை, மனைப்பொருளியல், அழகியல் பயிற்சிகளை வழங்கி வருகின்றது.
- கிளிநொச்சி மாவட்டத்தில் கரைச்சி, கண்டாவளை, பூநகரி, பச்சிலைப்பள்ளி ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில் இயங்கும் மகளிர் அபிவிருத்தி நிலையங்களில் தலா 20 மாணவர்கள் வீதம் 80 மாணவர்கள் பயிற்சி பெற்று வெளியேறியுள்ளனர். இவர்களுக்கு 12 மாதகாலத்தினைக் கொண்ட மனைப்பொருளியல் டிப்ளோமா பாடத்திட்டம் எனும் அடிப்படையில் பயிற்சிகள் வழங்கப்பட்டன. ஒவ்வொரு மாணவர்களுக்கும் நாள் ஒன்றுக்கான ஊக்குவிப்புக் கொடுப்பனவாக ரூபா200.00 வழங்கப்படுகின்றது. பயிற்சியின் முடிவில் அனைத்து பிரதேசசெயலக பிரிவிலும் பரீட்சைகள் நடாத்தப்பட்டு, இறுதியாக கண்காட்சியும் பிரதேச,மாகாண மட்டத்தில் நடாத்தப்படுகின்றது.
- வடக்கு மாகாண கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் இணையத்தகவல் முறைமை (Web Based Information System) மூலம் தேவையான விடயங்களை பெற்றுக்கொள்ள வசதி ஏற்படுத்தப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

1. பிரதேச ரீதியாக தரவேற்றம்
2. தொடர்பு கொள்வதற்கான விபரங்கள்
3. பதிவு செய்யப்பட்ட சங்கங்கள் (Registered Society)

4. பதிவு செய்யப்பட்ட சங்கங்களின் நிர்வாக விபரங்கள் (Committee Details for Registered Society)

5. பதிவு செய்யப்பட்ட சங்கங்களின் சொத்து விபரம்.

6. சங்கங்களின் மற்றும் சங்க அங்கத்தவர்களின் தரமான உற்பத்திகள் தொடர்பான தகவல்களின் விபரம்.

7. திணைக்களத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட கிராம மாதர் கிராம அபிவிருத்தி சங்கங்களின் பதிவு இலக்கத்திடனான விபரங்கள்.

8. தரவிறக்கம் செய்யக்கூடிய வசதி.

9. யாப்பு விதிகள்.

10. பயிற்சி விண்ணப்பங்கள்.

11. பதிவுச் சான்றிதழ்.

12. திணைக்கள சுற்று நிருபங்கள்.

வேலைத்திட்டங்கள்	இடம்	ஒதுக்கீடு
புதிய பாலம் அமைத்தல்	மாயவனூார்	3மில்லியன்
புதிய பாலம் அமைத்தல்	புன்னைநீராவி	3மில்லியன்
மொத்தம்		**6மில்லியன்**

2.3 நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள்

➢ மாவட்ட சிறுவர் அபிவிருத்திக்குழு கலந்துரையாடல்

கிளிநொச்சி மாவட்டத்தில் சிறுவர்களுடன் பணியாற்றும் உத்தியோகத்தர்களுடன் அரசாங்க அதிபரின் தலைமையில் மாவட்ட சிறுவர்களின் அபிவிருத்தி தொடர்பாக காலாண்டிற்கு ஒரு கலந்துரையாடல் வீதம் நான்கு கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டன. ஒரு கலந்துரையாடலுக்கு 3500 வீதம் 1400 ஒதுக்கீடு கிடைக்கப்பெற்று செலவு மேற்கொள்ளப்பட்டது.

1 ம் காலாண்டு - 28/03/2023- பங்குபற்றியோர் - 60
2 ம் காலாண்டு - 08/08/2023 - பங்குபற்றியோர் -83
3 ம் காலாண்டு - 20/10/2023 - பங்குபற்றியோர் - 51
4 ம் காலாண்டு - 21/12/2023 - பங்குபற்றியோர் -60





➢ மாவட்ட சிறுவர் சபைக் கலந்துரையாடல்

மாவட்ட சிறுவர் சபையில் அங்கத்துவம் வகிக்கும் சிறுவர்களுடனான மூன்று கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டன. ஒரு கலந்துரையாடலுக்கு 8000 வீதம் 24000 ஒதுக்கீடு கிடைக்கப்பெற்று செலவு மேற்கொள்ளப்பட்டது.

முதலாவது கலந்துரையாடல் - 9/6/2023 - பங்குபற்றியோர் - 29

இரண்டாவது கலந்துரையாடல் - 25/08/2023 - பங்குபற்றியோர் - 24

மூன்றாவது கலந்துரையாடல் - 08/12/2023 - பங்குபற்றியோர் - 25

➢ தேசிய மாற்று பராமரிப்பு கொள்கை தொடர்பான செயலமர்வு

தேசிய மாற்று பராமரிப்புகொள்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பான செயலமர்வு சிறுவர்களுடன் பணியாற்றும் 40 உத்தியோகத்தர்களுக்கு நடாத்தப்பட்டது. இச் செயலமர்விற்காக 114450 நிதி ஒதுக்கிடு கிடைக்கப்பெற்று 102505 செலவு மேற்கொள்ளப்பட்டது. மாவட்ட திறன் விருத்தி மண்டபத்தில் 14/12/2023ம் திகதி இச்செயலமர்வு நடாத்தப்பட்டது.

➢ மாவட்ட மதாந்த முன்னேற்ற கலந்துரையாடல்கள்

பிரதேச செயலக பிரிவில் கடமையாற்றும் சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர்களினால் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளின் முன்னேற்றம் தொடர்பாக இவ்வருடத்தில் 10 கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டன. ஒரு மாதக்கிற்கான கலந்துரையாடலுக்கு 3000 வீதம் 36000 நிதி ஒதுக்கீடு கிடைக்கப்பெற்று 29800 செலவு மேற்கொள்ளப்பட்டது.

➢ சிறுவர்களை வலுப்படுத்தும் நிகழ்வு

சிறுவர்களை வலுப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டத்திற்கு அமைவாக 2023 ஆம் ஆண்டிற்கான உலக சிறுவர் தின நிகழ்வு நடாத்தப்பட்டது.

மாவட்ட திறன் விருத்தி மண்டபத்தில் 06/10/2023 அன்று முதியோர் தினத்துடன் இணைந்த வகையில் சிறுவர் தின நிகழ்வும் நடாத்தப்பட்டது. இந்நிகழ்வில் 50 சிறுவர்கள் கலந்துகொண்டனர். இந்நிகழ்விற்கான ஒதுக்கீடாக 7500 கிடைக்கப்பெற்று செலவு மேற்கொள்ளப்பட்டது.





➢ **சிறுவர் சமூக உதவியாளருக்கான பயிற்சி**

கிராமமட்டத்தில் இயங்கும் சிறுவர் கழகங்களுடன் இணைந்து செயற்படும் சிறுவர் கழக வசதிப்படுத்தநர்களுக்கு சிறுவர்களுடன் இணைந்து பணியாற்றல் மற்றும் சிறுவர் கழகங்களில் சிறுவர்களை இணைத்தல் தொடர்பான பயிற்சி வழங்கப்பட்டது. மாவட்டதிறன் விருத்திமண்டபத்தில் 19-11-2023 அன்று 12 சிறுவர் கழக வசதிப்படுத்துநர்களுக்கு இப்பயிற்சி வழங்கப்பட்டது. ரூ.5000 நிதி ஒதுக்கீடு கிடைக்கப்பெற்று செலவு மேற்கொள்ளப்பட்டது.

2.4 மகளிர் சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூகவலுவூட்டல் அமைச்சு

இல	மாவட்ட செயலகம் அல்லது பிரதேச செயலகம்	திட்ட செயற்பாடுகள்	ஒதுக்கீடு
01	மாவட்ட செயலகம்	மகளிர் தினத்திற்கான சிறந்த பெண்தொழில் முயற்சியாளர் தெரிவு	5000
02	கண்டாவளை	கிராமப்புறத்தில் உள்ள நுண்நிதி கடன் பிரச்சனையால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கான வாழ்வாதார உதவி	100,000
03	மாவட்ட செயலகம் அனைத்து பிரதேச செயலகங்கள்	பால்நிலைசார் சார்வன் முறையினால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கான அவசர உதவி	25,000
03	மாவட்ட செயலகம் அனைத்து பிரதேச செயலகங்கள்	பிரயாணப்படி	240000

2.5 சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி சேவைகள்

இளைஞர் யுவதிகளின் வியாபார இயலுமை மற்றும் பயன்தரு தன்மையினை விருத்தி செய்வதன் மூலம் தொழில் நிர்மாணத்தை அதிகரித்து வருமான மட்டத்தினை உயர்த்தி நாட்டின் பொருளாதார துறையில் முயற்சியாளர்களின் உச்சவாய்ப்பினை பெற்றுக்கொடுக்கும் முகமாக சிறுதொழில் முயற்சி அபிவிருத்திப்பிரிவு கீழ்வரும் அலகுகளின் ஊடாக பல திட்டங்களினை செயற்படுத்தி வருகின்றது

01. முயற்சியாண்மை அபிவிருத்தி அலகு
02. சந்தைப்படுத்தல் அபிவிருத்தி அலகு
03. நிதி மற்றும் உதவிச்சேவை அலகு

04. தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்க அலகு

05. வணிக ஆலோசனை சேவை அலகு

06. ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி அலகு

மேற்படி அலகுகளின் ஊடாக வணிக வாய்ப்பக்களினை அடையாளம் காணுதல், வணிகப்பிரச்சனைகளுக்கு தீர்வு காணுதல், சந்தைவாய்ப்புகளினை அடையாளம் காணுதல், பயிற்சி வழங்குதல் மற்றும் விருத்தி செய்தல் தொடர்பான தொழில் முயற்சியாளர்களின் நலன் சார்ந்த பல திட்டங்கள் சிறுதொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவினால் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

இல	பயிற்சி	திகதி	மாவட்டம் / பிரதேச செயலகப்பிரிவு	செலவு	பங்குபற்றுநர்
1.	வியாபார ஊக்குவிப்பு செயலமர்வு (Online)	26.01.203	மாவட்டம்	0.00	37
2.	வியாபார ஊக்குவிப்பு செயலமர்வு	16.02.2023	கரைச்சி	4800.00	27
3.	வியாபார ஊக்குவிப்பு செயலமர்வு	16.02.2023	பூநகரி	9800.00	26
4.	வியாபார ஊக்குவிப்பு செயலமர்வு	16.02.2023	கண்டாவளை	4800.00	30
5.	வியாபார ஊக்குவிப்பு செயலமர்வு	16.02.2023	பச்சிலைப்பள்ளி	4800.00	28
6.	குழுதொழில் நுட்பப் பயிற்சி(Mehndi)	16.02.2023	மாவட்டம்	14200.00	28
7.	மாதாந்த சந்தை	22.02.2023	கரைச்சி	8900.00	10
8.	மாதாந்த சந்தை	22.02.2023	பூநகரி	19300.00	10
9.	மாதாந்த சந்தை	27.02.2023	கண்டாவளை	15500.00	15
10.	மாதாந்த சந்தை	27.02.2023	பச்சிலைப்பள்ளி	9180.00	12
11.	குழு தொழில் நுட்பப் பயிற்சி(Ari)	23.02.2023 24.02.2023	கண்டாவளை	21600.00	30
12.	குழு தொழில் நுட்பப் பயிற்சி(Hand Bag &Burse)	23.02.2023 24.02.2023	கரைச்சி	33300.00	30
13.	குழு தொழில் நுட்பப் பயிற்சி(Mehndi)	23.02.2023	பச்சிலைப்பள்ளி	12000.00	25
14.	உத்தியோகத்தர் பயிற்சி (FR & ICT)	01.03.2023	மாவட்டம்	9900.00	12
15.	வியாபார ஊக்குவிப்பு செயலமர்வு VTA	10.03.2023	பச்சிலைப்பள்ளி	5550.00	35
16.	உணவுக்கண்காட்சி	22.03.2023	கரைச்சி	21600.00	10
17.	சந்தைப்படுத்தல் ஊக்குவிப்பு (Support for Logo, Label, Visiting Card)	24.03.2023	கரைச்சி	7800.00	10
18.	குழு தொழில் நுட்பப் பயிற்சி jewellery making	15.03.2023 16.03.2023	பச்சிலைப்பள்ளி	24600.00	20
19.	மாதாந்த சந்தை	27.03.2023	பச்சிலைப்பள்ளி	6180.00	12
20.	மாதாந்த சந்தை	27.03.2023	கண்டாவளை	11350.00	15
21.	மாதாந்த சந்தை	27.03.2023	பூநகரி	17200.00	10
22.	மாதாந்த சந்தை	10.04.2023	பச்சிலைப்பள்ளி	16500.00	57
23.	குழு தொழில் நுட்பப் பயிற்சி Palmyra product	20.04.2023 21.04.2023	பூநகரி	32050.00	30
24.	விலைமதிப்பிடுதல்	26.04.2023	பச்சிலைப்பள்ளி	5800.00	20
25.	கணக்கு பதிவு	27.04.2023	பச்சிலைப்பள்ளி	5800.00	20
26.	விலைமதிப்பிடுதல்	28.04.2023	கரைச்சி	8300.00	20
27.	கணக்கு பதிவு	09.05.2023	கரைச்சி	5800.00	20
28.	வியாபாரச்சட்டங்களும் நெறிமுறைகளும்	11.05.2023	கண்டாவளை	6400.00	20
29.	விலைமதிப்பிடுதல்	17.05.2023	பூநகரி	11800.00	20

30.	கணக்கு பதிவு	18.05.2023	பூநகரி	11800.00	20
31.	மாதாந்த சந்தை	29.05.2023	பூநகரி	17300.00	10
32.	மாதாந்த சந்தை	29.05.2023	கரைச்சி	10600.00	10
33.	மாதாந்த சந்தை	29.05.2023	கண்டாவளை	13350.00	15
34.	குழு தொழில் நுட்பப் பயிற்சி Candle Making	25.05.2023	கரைச்சி	14900.00	20
35.	மாதாந்த சந்தை	29.05.2023	பச்சிலைப்பள்ளி	12100.00	14
36.	உத்தியோகத்தர் பயிற்சி நெறி	09.06.2023	மாவட்டம்	16615.00	23
37.	குழு தொழில் நுட்பப் பயிற்சி Cake Icing & Decoration	22.06.2023	கரைச்சி		
38.	குழு தொழில் நுட்பப் பயிற்சி Artificial jewelry flower making	21.06.2023	பச்சிலைப்பள்ளி	12900.00	25
39.	விலைமதிப்பிடுதல்	20.06.2023	கண்டாவளை	5800.00	20
40.	கணக்கு பதிவு	21.06.2023	கண்டாவளை	5800.00	20
41.	குழு தொழில் நுட்பப் பயிற்சி Photo Frame	21.06.2023	மாவட்டம்	13900.00	20
42.	அழகுக்கலை நிபுணர்கள் சங்கம் புதுப்பித்தல்	22.06.2023	மாவட்டம்	10800.00	40
43.	மாதாந்த சந்தை	26.06.2023	பச்சிலைப்பள்ளி	12100.00	13
44.	மாதாந்த சந்தை	26.06.2023	கரைச்சி	14800.00	
45.	மாதாந்த சந்தை	26.06.2023	பூநகரி	12900.00	13
46.	பாடசாலை மாணவர்களுக்கான வியாபார ஊக்குவிப்பு செயலமர்வு	27.06.2023	கண்டாவளை	9300.00	60
47.	பாடசாலை மாணவர்களுக்கான வியாபார ஊக்குவிப்பு செயலமர்வு	30.06.2023	பூநகரி	11050.00	67
48.	வாடிக்கையாளர்சேவை	20.07.2023	பூநகரி	11800.00	15
49.	மாதாந்த சந்தை	31.07.2023	பச்சிலைப்பள்ளி	9700.00	12
50.	மாதாந்த சந்தை	31.07.2023	கண்டாவளை	11000.00	15
51.	மாதாந்த சந்தை	31.07.2023	பூநகரி	11540.00	10
52.	சந்தைப்படுத்தல் ஊக்குவிப்பு (Support for Logo, Label, Visiting Card)	18.07.2023	கண்டாவளை	8300.00	10
53.	சந்தைப்படுத்தல் ஊக்குவிப்பு (Support for Logo, Label, Visiting Card)	28.07.2023	கரைச்சி	8300.00	10
54.	வாடிக்கையாளர்சேவை	25.07.2023	கரைச்சி	10800.00	20
55.	பாடசாலை மாணவர்களுக்கான வியாபார ஊக்குவிப்பு செயலமர்வு	28.07.2023	பச்சிலைப்பள்ளி	16300.00	100
56.	மாதாந்த சந்தை	31.07.2023	கரைச்சி	8600.00	10
57.	குழு தொழில் நுட்பப் பயிற்சி Skin Care	03.08.2023	கரைச்சி	9400.00	30
58.	குழு தொழில் நுட்பப் பயிற்சி Ice cream Making	09.08.2023	கரைச்சி	11800.00	25
59.	வாடிக்கையாளர்சேவை	11.08.2023	பச்சிலைப்பள்ளி	8800.00	20
60.	ஏற்றுமதிச் சந்தை தொடர்பான செயலமர்வு	17.08.2023	கரைச்சி	12300.00	25
61.	வியாபாரச்சட்டங்களும் நெறிமுறைகளும்	18.08.2023	கரைச்சி	10800.00	20

62.	உணவு கண்காட்சி	16.08.2023	மாவட்டம்	31800.00	30
63.	கள விஜயம் (Business Analysis)	18.08.2023	பூநகரி	4578.00	4
64.	குழு தொழில் நுட்பப் பயிற்சி Photo Frame	22.08.2023	கரைச்சி	15300.00	25
65.	குழு தொழில் நுட்பப் பயிற்சி Mushroom product	25.08.2023	கண்டாவளை	14700.00	20
66.	மாதாந்த சந்தை	28.08.2023	பச்சிலைப்பள்ளி	12100.00	14
67.	மாதாந்த சந்தை	28.08.2023	கரைச்சி	10600.00	10
68.	மாதாந்த சந்தை	28.08.2024	கண்டாவளை	14100.00	15
69.	குழு தொழில் நுட்பப் பயிற்சி Bouquet Making	07.08.2023	பச்சிலைப்பள்ளி	11630.00	20
70.	மாதாந்த சந்தை	04.09.2023	பூநகரி	9540.00	10
71.	வியாபாரத்திட்டம் தயாரித்தல்	14.09.203 15.09.2023	பச்சிலைப்பள்ளி	11800.00	15
72.	வியாபாரத்திட்டம் தயாரித்தல்	19.09.2023 20.09.2023	கரைச்சி	14800.00	15
73.	பொதியிடல்	22.09.2023	கரைச்சி	7600.00	20
74.	பாடசாலை மாணவர்களுக்கான வியாபார ஊக்குவிப்பு செயலமர்வு	14.09.2023	கரைச்சி	18046.00	100
75.	தொழில் நுட்பப் பயிற்சி குழு Bee Keeping	21.09.2023	கண்டாவளை	9900.00	20
76.	வியாபாரத்திட்டம் தயாரித்தல்	22.09.2023	பூநகரி	11900.00	15
77.	மாதாந்த சந்தை	25.09.2023	கரைச்சி	8600.00	10
78.	மாதாந்த சந்தை	25.09.2023	பச்சிலைப்பள்ளி	9700.00	17
79.	சந்தைப்படுத்தல் ஊக்குவிப்பு (Support for Logo, Label, Visiting Card)	22.09.2023	கண்டாவளை	6500.00	10
80.	மாதாந்த சந்தை	26.09.2023	கண்டாவளை	1000.00	10
81.	உணவக்கண்காட்சி	25.09.2023	கண்டாவளை	10000.00	10
82.	குழு தொழில் நுட்பப் பயிற்சி Mehandi	26.09.2023	பூநகரி	17800.00	30
83.	குழு தொழில் நுட்பப் பயிற்சி Jeweltry making	03.10.2023 04.10.2023	பச்சிலைப்பள்ளி	19100.00	25
84.	கள விஜயம் (Analyzed Business)	06.10.2023	கண்டாவளை	600.00	5
85.	குழு தொழில் நுட்பப் பயிற்சி Liquid hand wash	12.10.2023	கரைச்சி	12600.00	20
86.	குழு தொழில் நுட்பப் பயிற்சி Camphor making	19.10.2023 20.10.2023	பச்சிலைப்பள்ளி	20100.00	20
87.	குழு தொழில் நுட்பப் பயிற்சி Terracotta Jeweltry making	17.10.2023 18.10.2023	கரைச்சி	25200.00	25
88.	மாதாந்த சந்தை	30.10.2023	கரைச்சி	5100.00	10
89.	மாதாந்த சந்தை	30.10.2023	பச்சிலைப்பள்ளி	9700.00	15
90.	மாதாந்த சந்தை	30.10.2023	கண்டாவளை	10000.00	10
91.	மாதாந்த சந்தை	30.10.2023	பூநகரி	9540.00	10
92.	வாடிக்கையாளர்சேவை	18.10.2023	கண்டாவளை	9600.00	20
93.	வியாபாரத்திற்கான வழி காட்டல்	19.10.2023	பூநகரி	15800.00	20
94.	குழு தொழில் நுட்பப் பயிற்சி Saree Blouse Designing	26.10.2023	கண்டாவளை	15100.00	25

95.	குழு தொழில் நுட்பப் பயிற்சி Cap Product of Palmirah	31.10.2023 01.11.2023	பச்சிலைப்பள்ளி	15200.00	20
96.	School Competition Art & Essay	26.10.2023	மாவட்டம்	34820.00	156
97.	குழு தொழில் நுட்பப் பயிற்சி Liquid hand wash	03.11.2023	பூநகரி	16350.00	25
98.	குழு தொழில் நுட்பப் பயிற்சி Palmira Product	07.11.2023 09.11.2023	பச்சிலைப்பள்ளி	16400.00	12
99.	குழு தொழில் நுட்பப் பயிற்சி Cake Icing	08.11.2023	கண்டாவளை	11300.00	25
100.	நிகழ்நிரை சந்தைப்படுத்தல் (Online Marketing)	07.11.2023	கரைச்சி	11200.00	20
101.	மாவட்ட கண்காட்சி	10.11.2023 11.11.2023	மாவட்டம்	132230.00	60
102.	உணவு உற்பத்திக்கான ஆய்வு கூட மாதிரி பரீட்சித்தல் (அரை மானியம்)	16.11.2023	மாவட்டம்	6685.00	1
103.	வியாபாரத்திற்கான வழி காட்டல்	21.11.2023	பூநகரி	9300.00	15
104.	வியாபார ஊக்குவிப்பு செயலமர்வு VTA	16.11.2023	கண்டாவளை	6900.00	25
105.	மாதாந்த சந்தை	24.11.2023	கண்டாவளை	13300.00	15
106.	மாதாந்த சந்தை	20.11.2023	பச்சிலைப்பள்ளி	9700.00	15
107.	மாதாந்த சந்தை	27.11.2023	பூநகரி	9540.00	10
108.	குழு தொழில் நுட்பப் பயிற்சி Broom Making	17.11.2023	பூநகரி	15050.00	25
109.	மாதாந்த சந்தை	27.11.2023	கரைச்சி	10100.00	10
110.	குழு தொழில் நுட்பப் பயிற்சி Leather Bag	22.11.2023	கண்டாவளை	11950.00	20
111.	சந்தைப்படுத்தல் ஊக்குவிப்பு (Support for Logo, Label, Visiting Card)	21.11.2023	கரைச்சி	4300.00	5
112.	பாடசாலை மாணவர்களுக்கான கட்டுரை மற்றும் சித்திரப்போட்டி	17.11.2023	மாவட்டம்	29100.00	
113.	விலைமதிப்பிடல்	22.11.2023	மாவட்டம்	13800.00	35
114.	குழு தொழில் நுட்பப் பயிற்சி Photo Frame	07.12.2023	பூநகரி	17900.00	20
115.	உணவு உற்பத்திக்கான ஆய்வு கூட மாதிரி பரீட்சித்தல் (அரை மானியம்)	12.12.2023	மாவட்டம்	6460.00	1
116.	பாடசாலை மாணவர்களுக்கான கட்டுரை மற்றும் சித்திரப்போட்டிகளுக்கான பரிசில் வழங்கும் நிகழ்வு	20.12.2023	மாவட்டம்	110700.00	150

2.6 தேசிய அனர்த்த நிவாரண சேவைகள்

தேசிய பேரிடர் நிவாரண சேவை மையம் சமூக சேவைகள் மற்றும் சமூக நல அமைச்சகத்தின் கீழ் 1996 இல் நிறுவப்பட்டது. இப்போது அது பாதுகாப்பு அமைச்சின் கீழ் மாவட்ட செயலகத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

நோக்கங்கள்:

பேரிடர் நிவாரணத்திற்கான தேசிய திறன்களை ஊக்குவித்து வலுப்படுத்துவதன் மூலம் பொருளாதார உள்கட்டமைப்பிற்கு குறைக்கப்பட்ட மனித துன்பங்கள் மற்றும் இழப்பு மற்றும் சேதம் ஆகியவற்றின் மூலம் நிலையான வளர்ச்சியின் தேசிய நோக்கத்திற்கு பங்களித்தல்.

முக்கிய செயற்பாடுகள்

- பேரிடர்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு குறுகிய மற்றும் நீண்ட கால நிவாரண நடவடிக்கைகள்.
- இயற்கை மற்றும் மனிதனால் ஏற்படும் பேரழிவுகளில் இருந்து மக்களை மீட்பதற்கான திட்டங்களை வகுத்து செயல்படுத்துதல்.
- பேரிடர்களைக் குறைப்பதற்குத் தேவையான திட்டங்களைத் திட்டமிட்டு செயல்படுத்துதல். (கழிவுநீர் வடிகால் சுத்தம் செய்தல்)
- சீர்திருத்தங்கள் மற்றும் மறுவாழ்வு நடவடிக்கைகள் செயல்படுத்தப்படுவதை உறுதிசெய்து சம்பந்தப்பட்ட தரப்பினருடன் ஒருங்கிணைத்து உத்தரவுகளை வழங்குதல்.
- இயற்கை மற்றும் மனிதனால் உருவாக்கப்பட்ட பேரிடர்களால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதாரம் மற்றும் பொருளாதாரத்தை இயல்பு நிலைக்கு கொண்டு வருவதற்காக மறுவாழ்வு மற்றும் சீர்திருத்த திட்டங்களை செயல்படுத்துதல்.பேரிடர் நிலைமைகள் பற்றிய தகவல்களை தயாரித்தல் மற்றும் விநியோகித்தல்.
- அவசரகால சூழ்நிலைகளில் நிவாரண நடவடிக்கை நடவடிக்கைகளின் ஒருங்கிணைப்பு.

இல	பிரதேச செயலகம்	GN பிரிவு	செயற்பாடு	பேரிடர் தேதி	பாதிக்கப்பட்டது		செலவு
					குடும்பங்களின் எண்ணிக்கை	உறுப்பினர்களின் எண்ணிக்கை	
1	பூநகரி		முட்கொம்பொனில் காட்டுத் தீ பரவுவதைத் தடுக்க	இருந்து04.08.2023 வரை 15.08.2023	65	154	82,450.00
2	பூநகரி		ஆனந்தபுரம் மற்றும் கிளிநகரில் டிப்போ சந்தியிலிருந்து இரத்தினபுரம் பாலம் வரை சாலையின் இருபுறமும் கழிவுநீர் வடிகாலை சுத்தம் செய்தல்.	இருந்து 14.11.2023 வரை 16.11.2023	61	190	17,550.00
3	கரைச்சி		பாலத்தை சுத்தம் செய்தல்		49	175	33,600.00
4	கரைச்சி & கண்டாவளை		கரைச்சி மற்றும் கண்டாவளை பிரதேச செயலர் பிரிவில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக 400 பாய்கள் மற்றும் 363 படுக்கை விரிப்புகள் கொள்வனவு செய்யப்பட்டு வழங்கப்பட்டுள்ளன.	இருந்து 14.12.2023 வரை 19.12.2023	0	400	366,170.00
			மொத்தம்		**175**	**919**	**499,770.00**

2.7 உள்ளக கணக்காய்வு செயற்பாடுகள்

உள்ளகக்கணக்காய்வுக் கிளை மாவட்டச் செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களின் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைகளையும் அதனுடன் தொடர்புடைய செயற்பாடுகளின் வினைத்திறன்களையும் விருத்தி செய்து கொள்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

உள்ளகக் கணக்காய்வுக் கிளையினால் இவ் வருடம் மேம்படுத்தப்பட்ட ஆண்டுக்கான வேலைத்திட்டம் தயாரிக்கப்பட்டதுடன் மாதந்தோறும் ஆண்டிற்கான வேலைத்திட்டத்திற்கமைவாக கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டம் தயாரிக்கப்பட்டு அதற்கமைவாக மாதாந்த முன் நிகழ்ச்சித் திட்டத்தின் அடிப்படையில் கணக்காய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. 2023ம் வருடத்தில் மொத்தமாக பதினெட்டு கணக்காய்வு அவதானிப்புக்கள் அனுப்பி வைக்கப்பட்டன. பதினெட்டு அவதானிப்புக்களுக்கான பதில்கள் உரிய காலத்தில் கிடைக்கப்

பெற்றதுடன் பொருத்தமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. ஆண்டுக்கான வேலைத்திட்டத்தில் 85 வீதமான செயற்பாடுகள் உள்ளகக்கணக்காய்வு நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டன. அத்துடன் கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது உள்ளகக்கணக்காய்வு நடவடிக்கைகள் இவ்வருடம் வினைத்திறனாகக் காணப்பட்டது.

விடயம்	மாவட்டச் செயலகம்	பிரதேசசெயலகம்				மொத்தம்
		கரைச்சி	கண்டாவளை	பச்சிலைப்பள்ளி	பூநகரி	
அவதானிப்புக்கள்	03	04	03	04	04	18
பதில்கள்	02	04	02	03	03	14
கிடைக்கப் பெறாதபதில்கள்	01	00	01	01	01	04

மேலும் அவதானிப்புக்களின் பிரதிகள் முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களத்திற்கும் பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவிற்கும் தேசிய கணக்காய்வு அலுவலகத்திற்கும் மாவட்டச் செயலகத்தின் பிரதம கணக்காளருக்கும் அனுப்பி வைக்கப்படுகின்றது.

உள்ளகக் கணக்காய்வுகளில் தோன்றிய பிரச்சனைகளைத் தீர்வுசெய்யும் முகமாக வருடத்தில் நான்கு கணக்காய்வு முகாமைத்துவக் கணக்காய்வுக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டது. இவ்வருடத்திற்கான கூட்டங்களில் முகாமைத்துவக் கணக்காய்வுக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டது. இவ் வருடத்திற்கான கூட்டங்களில் முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களத்தின் பணிப்பாளர் முதலாவது மற்றும் மூன்றாவது கூட்டத்திற்கு நிகழ் நிலை மூலமும் (Zoom) இரண்டாவது மற்றும் நான்காவது கூட்டத்திற்கு மாவட்ட செயலகத்திற்கு நேரடியாக வருகை தந்து பங்கு பற்றியதுடன் உள்நாட்டலுவல்கள் இராஜங்க அமைச்சின் பிரதம உள்ளகக் கணக்காய்வாளர் முதலாவது மற்றும் மூன்றாவது கூட்டத்தில் நிகழ்நிலை ஊடாகவும் (Zoom) பங்குபற்றியுள்ளார்கள்.

கணக்காய்வு முகாமைத்துவக் குழுக் கூட்டம்		முதலாம் காலாண்டு - 2023	இரண்டாம் காலாண்டு- 2023	மூன்றாம் காலாண்டு - 2023	நான்காம் காலாண்டு - 2023
மாவட்ட செயலகம் கிளிநொச்சி	Plan	10.02.2023	11.05.2023	04.08.2023	03.11.2023
	held	10.02.2023	23.06.2023	04.08.2023	10.11.2023
பிரதேச செயலகம் - கரைச்சி	Plan	07.02.2023	04.05.2023	28.07.2023	26.10.2023
	held	14.03.2023	04.05.2023	02.08.2023	26.10.2023
பிரதேச செயலகம் - கண்டாவளை	Plan	03.02.2023	02.05.2023	27.07.2023	24.10.2023
	held	01.02.2023	02.05.2023	27.07.2023	31.10.2023
பிரதேச செயலகம் - பச்சிலைப்பள்ளி	Plan	31.01.2023	27.04.2023	21.07.2023	17.10.2023
	held	31.01.2023	27.04.2023	21.07.2023	17.10.2023
பிரதேச செயலகம் - பூநகரி	Plan	02.02.2023	28.04.2023	25.07.2023	20.10.2023
	held	02.02.2023	28.04.2023	26.07.2023	25.10.2023

மேலும் பிரதேச செயலகங்களில் உள்ளகக் கணக்காய்வுக் கிளை ஸ்தாபிக்கப்பட்டு முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களத்தின் அறிவுறுத்தலுக்கமைவாக கணக்காய்வு செயற்பாடுகள் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டுவருகின்றது.

உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தர்களால் மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களின் செயற்திட்டங்களை பார்வையிட்டு அவற்றின் வினைத்திறன் பற்றிய அறிக்கைகள் அரசாங்க அதிபருக்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

கணக்காய்வு முகாமைத்துவ குழுக்கூட்டங்களில் பின்வரும் விடயங்கள் முறைமைகளினை பலப்படுத்தும் முகமாகவும் ஆபத்துக்களை தவிர்க்கும் முகமாகவும் கலந்துரையாடப்பட்டது.

- ❖ உள்ளக்கக் கட்டுப்பாடும் ஆபத்தும்
- ❖ உள்ளகக் கணக்காய்வு அவதானிப்பும் சீர்செய்தலும்
- ❖ கள விஜயம் தொடர்பான அவதானிப்புக்கள்
- ❖ தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் ஜயவினாக்கள் மீள்பரிசீலனை செய்தல்.
- ❖ கடந்தகால அரச கணக்கு குழுவின் கூட்ட அறிக்கை மீதான செயற்பாட்டு முன்னேற்றம்

2.8 காணி உபயோகக் கொள்கைத் திட்டமிடல்

திணைக்களத்தின் நோக்கு நாட்டின் நில வளத்தை சிறப்பாக பயன்படுத்துவதற்கு ஊக்கமளிப்பதாகும். இந்த நோக்கை அடைவதற்கு வேண்டிய பல பணிகளை திணைக்களம் மாவட்ட மற்றும் பிரதேச ரீதியாக மேற்கொண்டு வருகின்றது.

தொ. இல	நிகழ்வுகள்	இடம்	நிதி ஒதுக்கீடு	செலவு	சதவீத அடைவு
01	காணிப் பயன்பாட்டு தரவுகளை திரட்டுதல், இற்றைப்படுத்தல், தரவு பரிமாற்றுதல் மற்றும் திட்டமிடல் 1. தேசிய காணிப்பயன்பாட்டு ஆய்வு 2. நீர்நிலைகளை அடையாளப்படுத்தல்	கரைச்சி, கண்டாவளை, பச்சிலைப்பள்ளி, பூநகரி பிரதேச செயலக பிரிவுகள்	48,800	48,637.80	99%
02	மண் மற்றும் நீர் பாதுகாப்பு நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்துவதன் மூலம் குறைந்த பாவனையிலுள்ள விவசாய நிலங்களை பாதுகாத்தல்.	பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக பிரிவு	109,000	108,845	99%
03	பிரதேச காணிப்பயன்பாட்டுத் திட்டத்தை இற்றைப்படுத்தல்.	கரைச்சி, கண்டாவளை, பச்சிலைப்பள்ளி, பூநகரி பிரதேச செயலக பிரிவுகள்	20,000	20,000	100%
04	காணியின் உரிமை மற்றும் பயன்கொள்ளல் தொடர்பான ஆய்வு	கரைச்சி, கண்டாவளை, பச்சிலைப்பள்ளி, பூநகரி பிரதேச செயலக பிரிவுகள்	70,700	70,662	99%
05	மாவட்ட காணிப்பயன்பாட்டு குழுக்கூட்டம்	மாவட்டம்	16,000	13,290	83%
06	பிரதேச காணிப்பயன்பாட்டு குழுக்கூட்டம்	கரைச்சி, கண்டாவளை, பச்சிலைப்பள்ளி, பூநகரி பிரதேச செயலக பிரிவுகள்	49,000	45,500	92%

2.9 "அஸ்வெசும" நலன்புரி நன்மைகள்

2002 ஆம் ஆண்டு 24 ஆம் இலக்க நலன்புரி நன்மைகள் சட்டத்துக்கமைய 2022 ஆம்ஆண்டு ஒக்டோபர் 20 ஆம் திகதி 2302.்.23 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானியின்ஊடாக வெளியிடப்பட்ட, அமைச்சரவை அனுமதியுடனானநலன்புரி கொடுப்பனவுகளைபகிர்ந்தளிக்கும் கட்டளைகளை திருத்தம் செய்து அமுல்படுத்தப்பட்ட 2022 டிசம்பர் 15 ஆம் திகதி 2310.்.30 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானிஅறிவித்தலுக்கமைய அஸ்வெசும நலன்புரி நன்மைகள் வேலைத்திட்டம்செயற்படுத்தப்படுகிறது.பாதிக்கப்பட்ட, பாதிக்கப்படக்கூடிய, வறுமையான மற்றும் மிக வறுமையானகுடும்பங்கள் என்ற 04 கட்டங்களின் கீழ் அஸ்வெசும நலன்புரி கொடுப்பனவுவழங்கப்படுவதோடு, அங்கவீனமான, முதியவர்கள் மற்றும் சிறுநீரகநோயாளிகளுக்கும் வழமை போன்ற கொடுப்பனவுகள் வழங்கப்படுகின்றது.

"அஸ்வெசும" நலத்திட்டத்திற்காக கிளிநொச்சி மாவட்டத்தில் பெறப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை - 31413

"அஸ்வெசும" கொடுப்பனவு விபரங்கள் - கிளிநொச்சி மாவட்டம்

இல	பிரிவுகள்	பயனாளிகளின் எண்ணிக்கை							
		அஸ்வெசும தொகை (ரூ.)							மொத்த பயனாளிகள்
		1250/-	2500/-	4250/-	5000/-	7500/-	8500/-	15000/-	
1	கரைச்சி	379	1345	1595	777	1138	1940	489	**7663**
2	கண்டாவளை	175	562	609	272	459	686	149	**2912**
3	பச்சிலைப்பள்ளி	78	370	463	194	339	612	199	**2255**
4	பூநகரி	136	521	550	368	387	847	300	**3109**
	மாவட்ட மொத்தம்	**768**	**2798**	**3217**	**1611**	**2323**	**4085**	**1137**	**15939**

அஸ்வெசும சமூக நலன்புரித் திட்ட உதவிகள் தொடர்பில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள மேன்முறையீடுகள் மற்றும் ஆட்சேபனைகள் தற்போது பிரதேச செயலாளர்களின் தலைமையில் பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றன. இந்தப் பணிகள் நிறைவடைந்தவுடன் 2024ஆம் ஆண்டுக்கான புதிய விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் பணியை ஆரம்பிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பிரிவுகள்	மேல்முறையீடுகள்	ஆட்சேபனைகள்	மொத்தம்
கரைச்சி	4860	121	4981
கண்டாவளை	1889	06	1895
பச்சிலைப்பள்ளி	832	02	834
பூநகரி	1961	29	1990
மாவட்ட மொத்தம்	**9542**	**158**	**9700**

2.9 கலாசார அலுவல்கள் சேவைகள்

01. பாரம்பரிய விளையாட்டு

பாரம்பரிய கிராமிய விளையாட்டுப் போட்டிஜெயந்திநகர் ஸ்ரீ மினாட்சி கலை நர்த்தனாலயத்தில் இடம்பெற்றது. 150 பேர் வரையில் கலந்து கொண்டனர்





02. விசாகப் பொங்கல் உற்சவம்

கண்டாவளை பிரதேச செயலர் பிரிவிலுள்ள பெரியகுளம் குளக்கட்டு சித்தி விநாயகர் ஆலயத்தில் விசாகப் பொங்கல் நிகழ்வு இடம்பெற்றது. 25 பேர் வரையில் கலந்து கொண்டனர்.





03. பாரம்பரிய கலைஞர்களுக்கான ஒன்று கூடல்

பாரம்பரிய கலைகளை ஆற்றுப்படுத்துகின்ற கலைஞர்களுக்கான ஒன்றுகூடல் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது. 50 பேர் வரையில் கலந்து கொண்டனர்.





04. கலை நிறுவனங்களுக்கான செயலமர்வு

கலை நிறுவன உறுப்பினர்கள், ஆசிரியர்கள், மாணவர்களுக்கான இணையவழிப் பயன்பாடு மற்றும் உற்பத்தித்திறன் தொடர்பான செயலமர்வு மாவட்ட செயலக மாணாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது. 50 பேர் வரையில் கலந்து கொண்டனர்.

05. கதை சொல்லுதல் வேலைத்திட்டம்

பாரதிபரம் சிறுவர்கழக மாணவர்களுக்கான கதை சொல்லுதல் தொடர்பான செயலமர்வு இடம்பெற்றது. 50 பேர் வரையில் கலந்து கொண்டனர்.

06. பாரம்பரிய உணவுப் பொருட்களின் கண்காட்சியும் விற்பனையும்

பாரம்பரிய உணவுப் பொருட்களின் கண்காட்சியும் விற்பனையும் கிளிநொச்சி பசுமைப்பூங்கா வளாகத்தில் இடம்பெற்றது. 130 பேர் வரையில் கலந்து கொண்டனர்.





07. காணொளி இறுவெட்டு வெளியீடு

கழுமரம் அரங்காற்றுகை கானொளி வெளியீட்டு நிகழ்வு கூட்டுறவாளர் மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது. 110 பேர் வரையில் கலந்து கொண்டனர்.





08. இலக்கிய ஆய்வரங்கு

2009 ஆம் ஆண்டிற்குப் பின்னரான கிளிநொச்சி மாவட்டத்தினை அடிப்படையாக கொண்ட இலக்கிய முயற்சிகள் ஆய்வரங்கு மாவட்ட செயலக திறன்விருத்தி மண்டபத்தில் இடம்பெற்றது.255 பேர் வரையில் கலந்து கொண்டனர்.





09. கலைஞர்களுக்கான உதவி வழங்கல்

ஏழ்மைக்கு கைகொடுக்கும் உறவுகள் அமைப்பின் அனுசரணையில் கலைஞர்களுக்கான உலர் உணவுப்பொருட்கள் வழங்கப்பட்டன. 32 பேர் வரையில் கலந்து கொண்டனர்.

10. மாவட்ட கலை இலக்கிய விழா

	307-2-1-10-2104	177,000.00	156,440.00	88%
	307-2-1-12-2104	65,000.00	64,250.00	99%
	307-2-1-6-1409	80,000.00	69,890.00	87%
	307-2-1-8-1409	180,000.00	174,413.00	97%

சமுதாயஞ்சார் சீர்திருத்தத் திணைக்களம்	326-1-1-0-1101	112,000.00	111,489.50	100%
காணி உபயோகக் கொள்கை திட்டமிடல் திணைக்களம்	327-2-1-0-1101	251,100.00	249,838.00	99%
	327-2-1-0-1201	8,000.00	8,000.00	100%
	327-2-1-0-2507	177,800.00	177,482.80	100%
	327-2-1-0-2509	135,700.00	129,452.00	95%
மனிதவலு மற்றும் வேலைவாய்ப்பு திணைக்களம்	328-1-1-0-1101	210,378.00	198,335.56	94%
	328-1-1-0-1201	14,350.00	14,348.00	100%
	328-1-1-0-1402	42,000.00	39,153.84	93%
	328-1-1-0-1403	36,000.00	33,000.00	92%
	328-1-1-0-2103	47,826.00	47,826.00	100%
	328-2-2-2-2509	80,000.00	79,700.00	100%
	328-2-2-3-2509	2,625.00	2,625.00	100%
	328-2-2-4-2509	107,000.00	107,000.00	100%
பலநோக்கு அபிவிருத்தி செயலணி திணைக்களம்	334-1-1-0-1001	1,766,136.93	1,761,811.93	100%
	334-1-1-0-1003	8,867,100.00	8,744,850.00	99%
	334-1-1-0-1201	135,000.00	135,000.00	100%
	334-1-1-0-1402	9,000.00	9,000.00	100%
	334-1-1-0-1403	15,000.00	14,968.40	100%

3.8 நிதி அல்லாத சொத்து அறிக்கையிடல் செயலாற்றுகை

ஆதன குறியீடு	குறியீட்டு விபரம்	31.12.2023 சுற்றாய்வு அறிக்கையின்படி மீதி	31.12.2023 நிதி நிலமை அறிக்கையின்படி மீதி	எதிர்காலத்தில் கணக்கிட வேண்டியது.	அறிக்கையிடல் முன்னேற்றம்
9151	கட்டடம்	786,576,644.85	786,576,644.85		
9152	இயந்திரம்மற்றும் உபகரணம்	212,186,283.42	212,186,283.42		
9153	காணி	334,395,000	334,395,000		
9160	நடைபெறும் பணி	0	0		
9154	அருவமான சொத்து	773,000	773,000		

3.9 கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

මගේ අංකය எனது இல. My No. NPCG/KN/A/DSKN/2023 ඔබේ අංකය உமது இல. Your No.

දිනය திகதி Date 28 மே 2024

மாவட்டச் செயலாளர்
மாவட்டச் செயலகம்
கிளிநொச்சி.

கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தின் 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை

மேற்கூறப்பட்ட அறிக்கை மற்றும் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்கள் இதனுடன் அனுப்பி வைக்கப்படுகின்றது.

பா.பற்குணன்
சிரேஸ்ட உதவிக் கணக்காய்வாளர் தலைமை அதிபதி
கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்காக

பிரதி :- பணிப்பாளர் நாயகம், அரச கணக்குகள் திணைக்களம்.

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

මගේ අංකය
எனது இல.
My No. NPCG/KN/A/DSKN/2023

ඔබේ අංකය
உமது இல.
Your No.

දිනය
திகதி
Date 29 மே 2024

மாவட்டச் செயலாளர்
மாவட்டச் செயலகம்
கிளிநொச்சி.

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தின் 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு – 268, கிளிநொச்சி மாவட்ட செயலகத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் பொழிப்பாக்கிய முக்கியமான கணக்கீட்டு கொள்ளைகளையும் உள்ளடக்கிய முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் கிளிநொச்சி மாவட்ட செயலகத்திற்கு சமர்ப்பிக்கப்படும் இந் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை காலக்கிரமத்தில் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, நிதிக்கூற்றுக்களில் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மாவட்ட செயலகத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பவற்றை பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka.
+94 11 2 88 70 28 - 34 +94 11 2 88 72 23 ago@auditorgeneral.gov.lk www.naosl.gov.lk

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும், கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்க இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று அற்ற நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தின் நிதிக்கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரிக்கப்பட்டு பேணிச் செல்லப்படுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன் அம்முறையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதற்கமைய அம்முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்ககூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் மீதான தாக்கத்தின் அடிப்படையில் தங்கியிருக்கும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறைசார் பின்னணியுடன் செயற்படுத்தப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று உருவாகும் ஆபத்தினை இனங்காணுதல் மற்றும் மதிப்பீடு செய்தல் என்பவற்றிற்காக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்பட்டன. தவறுதலாக காண்பிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ்கூற்றினால் எழும் தாக்கத்தினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக காண்பித்தல் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் போன்ற காரணங்களால் ஆகும்.
- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

1.5 ஏனைய சட்ட ரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பின்வரும் விடயங்களை தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றது.

(ஆ) முன்னைய வருடத்திற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தது.

1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

1.6.1 நிதிச் செயலாற்றல் கூற்று

1.6.1.1 வருமானமல்லாத பெறுவனவு

வைப்புப் பெறுவனவுகள்

மீளாய்வாண்டில் திறைசேரி புத்தகங்களின் பிரகாரம் பொதுவைப்பு பெறுவனவு ரூபா 135,011,471 ஆக உள்ள போதும் ACA – F மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றில் பொதுவைப்பு பெறுவனவு ரூபா 136,493,748 ஆக காட்டப்பட்டுள்ளமையினால் ரூபா. 1,482,277 வேறுபாடு காணப்பட்டுள்ளது.

1.6.2 காசுப்பாய்ச்சல் கூற்று

1.6.2.1 முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாகிய காசுப்பாய்ச்சல்

திறைசேரி புத்தகங்களின் பிரகாரம் மீளாய்வாண்டில் ரூபா 15,929,785 பெறுமதியான நடைமுறையல்லாச் சொத்துக்கள் முடிவுறுத்தல் செய்யப்பட்டு ரூபா 1,675,760 காசாக பெற்றுக்கொள்ளப்பட்ட போதும் காசுப்பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு நடவடிக்கையில் சொத்து விற்பனை பெறுவனவாக ரூபா 1,907,731 வெளிப்படுத்தப்பட்டுள்ளமையால் வருமான பெறுவனவு 231,971 ரூபாவால் நிதிக்கூற்றுக்களில் அதிகரித்து வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

1.6.3 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

மாவட்டச் செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களின் 20 எண்ணிக்கையிலான காணியின் பெறுமதி ரூபா 334,395,000 மீளாய்வாண்டின் நிதிநிலைமைக்கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்த போதும் அவற்றில் 07 எண்ணிக்கையிலான காணிகளுக்கு மட்டுமே சட்டரீதியான உரிமை (Ownership) கையளிக்கப்பட்டிருப்பது மாவட்டச்செயலாளரின் 2024.05.08 ஆம் திகதிய KN/DS/FIN/CCF/AQ.DIS/29 ஆம் இலக்க கடிதம் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. 13 எண்ணிக்கையிலான காணிகள் உரித்தாக்கப்பட்ட சட்டரீதியான ஆவணங்கள் கையளிக்கப்பட்டிருக்காத போதும் ரூபா 202,870,000 பெறுமதியான காணிகள் ACA 6 இல் அதிகரித்து காட்டப்பட்டுள்ளமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டுள்ளது.

2. நிதி மீளாய்வு

2.1 செலவின முகாமைத்துவம்

268-1-1-5-1504 செலவின விடயத்திற்கு ஆண்டு மதிப்பீட்டில் எவ்விதமான ஒதுக்கீடுகளும் செய்யப்படாது குறைநிரப்பு ஒதுக்கீடு மூலம் ரூபா 140,000,000 பெறப்பட்டு ரூபா 125,662,456 செலவு செய்யப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது.

2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு	பெறுமதி (ரூபா)	இணங்காமை
(அ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் தாபனவிதிக்கோவை		
முதலாவது தொகுதி அத்தியாயம் XIV இன் பிரிவு 4.4	75,050	ஆறு மணித்தியாலங்களுக்கு குறைவான காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட களவிஜயங்களுக்கான இணைந்தபடிக் கொடுப்பனவு.
(ஆ) அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை		
2009 ஏப்ரல் 16 ஆம் திகதிய 09/2009 இலக்க சுற்றறிக்கையின் பந்தி(iv)	89,023	விரலடையாள பதிவு இன்றி வழங்கப்பட்ட மேலதிக நேர மற்றும் விடுமுறை தினக்கொடுப்பனவு

(இ) ஏனைய சுற்றறிக்கைகள்

(i)	காணி அபிவிருத்தி கட்டளை சட்டத்தின் 464 ஆம் அத்தியாயம் 19(2) ஆம் பிரிவு	-	• மீளாய்வாணடில் வழங்கப்பட்ட 173 காணி அனுமதிப் பத்திரங்கள் 2023 மார்ச் 31 ஆந் திகதி வரை உரிய நபர்களுக்கு வழங்கப்படாமல் கண்டாவளை பிரதேச செயலகத்தில் தேக்கி வைக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. • வழங்கப்பட்ட 717 காணி அனுமதிப் பத்திரங்கள் தொடர்பாக காணி பதிவேடு பேணப்பட்டிருக்காமை
(ii)	காணி ஆணையாளர் திணைக்களத்தின் 1996 ஆகஸ்ட் 01 ஆம் திகதிய 96/05 இலக்க சுற்றுநிரூபத்தில் 5(iii), 6(இ)	3,129,750	கரைச்சி பிரதேச செயலகத்தால் குத்தகைக்கு வழங்கப்பட்ட காணிகளுக்கு 2005 தொடக்கம் 2023 வரை ரூபா 3,129,750 பெறுமதியான வருடாந்த நிலுவை மற்றும் குற்றப்பணம் அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

2.3 முற்பணம் வழங்கலும் தீர்ப்பனவும்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கையால் திருத்தப்பட்ட நிதி ஒழுங்கு விதி 371(5) இற்கமைய குறித்த பணிகள் பூரணப்படுத்தப்பட்ட 10 நாட்களில் பெற்றுக் கொண்ட உப கட்டுநிதி தீர்க்கப்பட வேண்டிய போதிலும் 14 சந்தர்ப்பங்களுக்குரியதாக வழங்கப்பட்டிருந்த ரூபா 492,900 கூட்டுத்தொகையான உப கட்டுநிதி 12 நாட்கள் தொடக்கம் 76 நாட்கள் வரையான காலதாமதத்தின் பின்னர் தீர்ப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டில் மாவட்டச்செயலகத்தின் ஒதுக்கு வாகனத்திற்கு 3 சந்தர்ப்பங்களில் ரூபா 30,500 முற்பணம் வேறு உத்தியோகத்தரினால் பெறப்பட்டு சீர்செய்யப்பட்டமை நிதி ஒழுங்கு விதி 371(4), 371(5) இற்கு முரணான விடயமாக அவதானிக்கப்பட்டுள்ளது.

2.4 முற்பணக் கொடுப்பனவு

அரச உத்தியோகத்தர் முற்பணக்கணக்கு இணக்கக்கூற்றின் பிரகாரம் பதவியிலிருந்து விலகிய உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய நிலுவை ரூபா 589,380 ஆனது கடந்த 13 வருடங்களுக்கு மேலாக அறவிட்டுக்கொள்வதற்கு நாளதுவரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 செயலாற்றல்

3.1.1 எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டு மட்டம் அடையப்படாமை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) தேசிய ஒருங்கிணைப்பு மற்றும் நல்லிணக்க அமைச்சின் நிதி பங்களிப்பில் 2019 ஆம் ஆண்டில் மாவட்டச் செயலகம் கிளிநொச்சியினால் கொள்வனவுசெய்யப்பட்ட வெல்லஉற்பத்தி, பதநீர் அடைத்தல், கள் அடைத்தல் ஆகியவற்றிற்கான இயந்திர உபகரணத் தொகுதி கிளிநொச்சி மாவட்ட பனை தென்னைவள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கத்திற்கு ரூபா 26,165,050 பெறுமதியில் வழங்கப்பட்ட உபகரணங்கள் வழங்கப்பட்ட திகதியிலிருந்து கடந்த 05 வருடங்களுக்கு மேலாக பயன்பாடற்று காணப்படுகின்றது. மேலும் குறித்த செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்த நாளதுவரை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீள்குடியேற்றம் புனர்வாழ்வளிப்பு வடக்கு அபிவிருத்தி மற்றும் இந்து மத அலுவல்கள் அமைச்சின் நிதியின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட பழங்கள் மற்றும் மரக்கறிகளை பதனிடல் தொழிற்சாலைகளுக்கான ரூபா 17,600,000 இயந்திர கொள்வனவு செய்து 2018 ஆம் ஆண்டில் விநாயகபுரம் விவசாயிகளின் கூட்டுறவுச் சங்கத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. எனினும் வழங்கப்பட்ட காலப்பகுதியிலிருந்து இன்றுவரை கடந்த 06 வருடங்கள் குறித்த உபகரணங்கள் பயன்பாடின்றி காணப்படுகின்றது. குறித்த செயற்திட்டத்தினை நடைமுறைப்படுத்த நாளது வரை நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) மாவட்டச் செயலகத்தினால் மேற்கொள்ளப்பட்ட திருவையாறு படித்த வாலிபர் விவசாய நுகர்ச்சி கூட்டுறவுச் சங்கத்தின் பப்பட உற்பத்திக்கான உபகரணம் 2018 ஆம் ஆண்டு ரூபா 9,386,653 பெறுமதியில் கொள்வனவு செய்து வழங்கப்பட்டிருந்த போதும் வழங்கப்பட்ட காலப்பகுதியிலிருந்து இன்று வரை கடந்த 06 வருடங்களாக பயன்பாடின்றி காணப்படுகிறது. அதனை பயன்படுத்துவதற்குரிய எவ்வித ஆக்கபூர்வமான நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஈ) பூநகரி பிரதேச செயலகத்தினால் முட்கொம்பன் மாதர் கிராம அபிவிருத்தி சங்கத்திற்கு கிராமிய உட்கட்டமைப்பு அபிவிருத்தி நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் தேங்காய் எண்ணெய், உள்ளூர் உற்பத்தி மற்றும் பொதியிடல் தொடர்பான கைத்தொழில்

நடவடிக்கைகளிற்கு ரூபா 1,373,240 பெறுமதியான கட்டிட புனர்நிர்மாணம் மற்றும் உபகரணங்கள் 2019 ஆண்டில் கொள்வனவு செய்து கையளிக்கப்பட்டிருந்த போதும் வழங்கப்பட்ட காலப்பகுதியிலிருந்து இன்றுவரை கடந்த 05 வருடங்களுக்கு மேலாக இயந்திரங்கள் பொருத்தப்படாது பயன்பாடின்றி காணப்படுவதுடன் இச் செயற்திட்டத்தினை நடைமுறைப்படுத்த நாளது வரை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(உ) மீள்குடியேற்றம் புனர்வாழ்வளிப்பு வடக்கு அபிருத்தி மற்றும் இந்து மத அலுவல்கள் அமைச்சின் நிதியினூடாக நடைமுறைப்படுத்தப்பட்ட கரைச்சி தெற்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தினால் சேதனப் பசளை உற்பத்தி செய்வதற்கு ரூபா 6,628,500 பெறுமதியான சேதனப்பசளை உற்பத்தி நிலைய கட்டிட அமைப்பு, உழவு இயந்திரம், உழவு இயந்திரப் பெட்டி மற்றும் சேதனப்பசளை உற்பத்தி உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டு 2019 ஆண்டில் வழங்கப்பட்டிருந்தும் வழங்கப்பட்ட காலப்பகுதியிலிருந்து இன்றுவரை கடந்த 04 வருடங்களுக்கு மேலாக பயன்பாடின்றி காணப்படுகிறது. இச் செயற்திட்டத்தினை நடைமுறைப்படுத்த நாளது வரை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஊ) சௌபாக்கியா கிராம அபிருத்தி திட்டத்தின் கீழ் முருங்கையிலை பவுடர் உற்பத்தி நிலைய கட்டமைப்பிற்காக ரூபா 1,485,000 பெறுமதியில் செலவு செய்யப்பட்டிருந்தது. நாளதுவரை இவ் உற்பத்தி நிலையம் பாவனையின்றி காணப்படுவது கணக்காய்வில் அவதானிக்கப்பட்டுள்ளது.

3.1.2 எதிர்பார்க்கப்பட்ட நலன்கள் (Outcome) பெற்றுக்கொள்ளப்படாமை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) பச்சிலைப்பள்ளி பிரதேச மக்களுக்கு குடியிருப்பதற்கு வீடு இல்லை என பிரதேச செயலகத்தால் இனங்காணப்பட்டு அம் மக்களுக்கு ரூபா 31,590,000 பெறுமதியில் அமைக்கப்பட்ட 55 எண்ணிக்கையான வீடுகளில் கடந்த 1 தொடக்கம் 4 வருடங்களாக மக்கள் குடியிருக்காமல் அவ்வீடுகளை சுற்றி பற்றைகள் வளர்ந்து பயன்பாடற்று காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டுள்ளது.

(ஆ) 04 எண்ணிக்கையான கூட்டுமொத்தம் ரூபா 4,600,000 பெறுமதியான பொதுமண்டபங்கள் மற்றும் கட்டிடங்கள் 01 தொடக்கம் 10 வருடங்களாக பயன்பாடின்றி காணப்படுகின்றமை அவதானிக்கப்படப்பட்டுள்ளது.

3.1.3 செயற்றிட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதம்

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் நிதி மூலம் மீளாய்வாண்டில் ஆரம்பிக்கப்பட்ட 03 எண்ணிக்கையான கூட்டுமொத்தம் ரூபா 3,000,000 பெறுமதியான வீடுகள் பூர்த்தி செய்யப்பட வேண்டிய காலம் நிறைவடைந்தும் நாளதுவரை வேலைகள் பூர்த்தி செய்யப்படவில்லை.

3.2 பெறுகைகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டில் மாவட்டச் செயலகத்தினால் தயாரிக்கப்பட்டு வழங்கப்பட்ட பெறுகைத்திட்டத்தில் காணப்பட்ட வேலைகள் முடிக்கப்பட்ட பின்பு மீளவும் திருத்திருத்தியமைக்கப்பட்ட பெறுகைத்திட்டமானது 2023.08.02 திகதியில் சமர்ப்பிக்கப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டின் ஆரம்ப பெறுகைத்திட்டத்தில் முன்மொழியப்பட்ட பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்தின் தங்கும் விடுதியை மேம்படுத்துவதற்காக ரூபா.4,000,000 ஒதுக்கப்பட்ட நிலையில் ரூபா 2,294,162 வேலை நிறைவேற்றப்பட்டிருப்பது அவதானிக்கப்பட்டதுடன் இந்நடவடிக்கையானது பெறுகைத்திட்டமிடல் சரியான முறையில் திட்டமிடப்பட்டிருக்காமையை வெளிப்படுத்துகிறது.

(இ) 2023 ஆம் ஆண்டின் ஜனவரி தொடக்கம் டிசம்பர் வரையான காலப்பகுதியில் 23 எண்ணிக்கையான ரூபா 1,080,774 பெறுமதியான நேரடி கொள்வனவுகள் 2006 ஆம் ஆண்டின் பெறுகை வழிகாட்டி அத்தியாயப்பிரிவு 3 இன் 3.5 இல் காட்டப்பட்ட தேவைப்பாடுகளின் அடிப்படையிலேயே நேரடி கொள்வனவுகள் மேற்கொள்ள முடியுமேயன்றி 23 வேலைகள் விதிவிலக்கான சூழ்நிலைக்கு உள்ளானதுமான விடயமாக காணப்படாமையால் கூறுவிலைகள் பெறவேண்டி திட்டத்தை பூரணப்படுத்தப்பட வேண்டியிருந்த போதிலும் நேரடி கொள்வனவு மூலம் செய்யப்பட்டிருந்தது அவதானிக்கப்பட்டுள்ளது.

3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) உரித்தாக்கம் செய்யப்படாத 13 எண்ணிக்கையான அரச காணிகள் உரித்தாக்கப்பட்டமைக்கான ஆவணங்கள் எவையும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்காத போதும் ரூபா 646,588,262 பெறுமதியான 50 எண்ணிக்கையிலான கட்டிடங்கள் குறித்த உரிமையற்ற அரச காணிகளில் நிறுவப்பட்டிருந்தமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டுள்ளது.

(ஆ) பிரதேச செயலகங்களில் கட்டப்பட்ட ரூபா 32,544,852 பெறுமதியான பிரதேச செயலர் விடுதிகள் மற்றும் உத்தியோகத்தர் விடுதி நிர்மாணம் செய்யப்பட்ட காலப்பகுதியிலிருந்து 3-4 வருடங்களாக பயன்பாடின்றி காணப்படுகின்றன.

3.4 வாகன முகாமைத்துவம்

கரைச்சி பிரதேச செயலகத்தின் பிரதேச செயலாளர் அலுவகத்திற்கு சமூகமளிக்காத நாட்கள் மற்றும் பொது விடுமுறை தினங்களில் கடமையாற்றிய நாட்களில் வாகன ஓட்ட அறிக்கையில் வாகனம் செலுத்திய தூரம் குறிப்பிடப்படாது வாகன சாரதிக்கு மேலதிக நேர கொடுப்பனவு ரூபா 29,986 வழங்கப்பட்டுள்ளமை கடமையை மேற்கொள்ளப்படாது வழங்கப்பட்டுள்ள மேலதிக கொடுப்பனவாக அவதானிக்கப்பட்டுள்ளது.

3.5 நட்டங்களும் சேதங்களும்

கண்டாவளை சமுர்த்தி வங்கியில் 2023 செப்ரெம்பர் 06 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட நேரடி கணக்காய்வு பரீட்சிப்பின் போது கள காசுப் பெறுவனவு புத்தக பௌதீக இருப்பிற்கும் அச்சிடப்பட்ட காகிதாதிகள் இருப்பிற்குமிடையே 903 காசுப் பெறுவனவு புத்தகங்கள் பற்றாக்குறையாக காணப்பட்டதுடன் அவை தற்போது வங்கியில் காணப்படவில்லை என வங்கி முகாமையாளர் எழுத்து மூலம் உறுதிப்படுத்தியுள்ளார். இச் செயற்பாடானது நிதி வங்கித் தொழிட்பாடுகள் பிரிவினால் வெளியிடப்படுகின்ற சமுர்த்தி வங்கிச் சங்க நெறிப்படுத்தல் கையேடு 12 இன் பந்தி 3.6 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாமல் இருப்பது அவதானிக்கப்பட்டுள்ளதுடன் காசுப் பெறுவனவு புத்தகங்கள் காணாமல் போனமை தொடர்பாக சமுர்த்தி முகாமையாளர் மற்றும் தொடர்புடைய தரப்பினர்களிடமிருந்து மேற்படி கையேட்டின் பந்தி 3.6 இன் பிரகாரம் ரூபா 22,575,000 அறவிடப்பட வேண்டியுள்ளது.

3.6 முகாமைத்துவ பலவீனம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) முறையான கையளிப்பு முறைமை இன்மையால் கரைச்சி பிரதேச செயலக தகவல் உத்தியோகத்தரால் 2020 திசெம்பர் 24 மற்றும் 2021 ஜனவரி 22 ஆம் திகதி கையொப்பம் இடப்பட்டு வழங்கப்பட்ட தகவல் வழங்குவதற்கான தீர்மானத்தில் (RTI 04) **"எமது கட்டுக்காப்பில் இல்லை"** என குறிப்பிடப்பட்ட இரு கோவைகள் பின்பு **"காணப்படுகின்றன"** என கரைச்சி பிரதேச செயலக KN/KR/EB/Procurement/Gen/2023-1 ஆம் இலக்க 2023 ஒக்டோபர் 25 ஆம் திகதி கடிதத்தின் பிரகாரம் மாவட்டச் செயலாளருக்கு அறிக்கையிடப்பட்டிருந்தது. இதன் காரணமாக மேலதிக வேலை, நேர விரயம் மற்றும் தேவையற்ற வேலைச்சுமை என்பன ஏற்பட வழிவகுத்தது.

(ஆ) வேறு திணைக்களங்களின் பயன்பாட்டிற்கு கையளிக்கப்பட்ட மாவட்டச் செயலக அரச விடுதியின் வாடகையினை அறவிடுவதற்கு நாளது வரை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டில் மாவட்ட சுற்றுச்சூழல் பாதுகாப்பு குழுகூட்டத்தில் மணல் விநியோகம் சம்மந்தமாக தீர்மானிக்கப்பட்டதுக்கு இணங்க மாவட்ட நீர்ப்பாசன பொறியியலாளரினால் மதிப்பிடப்பட்டதன் பிரகாரம் 2022 இல் இவ் மணல் ஒரு கியூப்பிற்கு ரூபா. 12000 என மதிப்பிடப்பட்டிருந்தது (2024 முதல் காலாண்டில் இதன் பெறுமதி ரூபா. 12000 (01 கியூப்) என தீர்மானிக்கப்பட்டது) அப்படி இருந்தும் ஒரு தனியார் நிறுவனத்திற்கு ஒரு கியூப் ரூபா. 250 இற்கு விற்பனை செய்துள்ளதால் ரூபா. (629.08*11750) 7,391,690 அரசிற்கு மீளாய்வாண்டில் இழப்பு ஏற்பட்டுள்ளது அவதானிக்கப்பட்டுள்ளது.

4. நிலைபேறான அபிவிருத்தி

4.1 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை இனங்காணல்

மாவட்ட செயலகத்தால் இனங்காணப்பட்டுள்ள நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்கள் மற்றும் அதற்கிணங்க தயாரிக்கப்பட்ட இலக்குகள் நிறுவனத்தின் செயல்நடவடிக்கைத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

5. மனிதவள முகாமைத்துவம்

5.1 அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் உள்ளபடியான பதவியணியினர் மற்றும் ஆளணி வேதனங்களுக்கான செலவினம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அங்கிகரிக்கப்பட்டவாறு கிளிநொச்சி மாவட்டச் செயலகம் மற்றும் 4 பிரதேச செயலகங்களின் 4 வகையான பதவி அணியினருக்கான 28 பதவியினர் வெற்றிடமாகவும் மற்றும் 118 பதவியினர் மேலதிகமாகவும் மீளாய்வாண்டில் இறுதியில் காணப்பட்டிருந்தனர்.

(ஆ) அரசாங்க உத்தியோகத்தர்களின் இடமாற்றம் தொடர்பாக 06.08.2021 ஆம் திகதியிடப்பட்ட 01/2021 ஆம் இலக்கமிடப்பட்ட அரச சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் இணைந்த சேவைகள் சுற்றறிக்கை, 13.09.2021 ஆம் திகதியிடப்பட்ட 18/2021 ஆம் இலக்கம் கொண்ட அரச சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை என்பவற்றுக்கு முரணாக மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களில் 05 வருடங்களுக்கு மேலாக இடமாற்றம் இன்றி 315 அரசாங்க உத்தியோகத்தர்கள் ஒரே சேவை நிலையத்தில் தொடர்ந்தும் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்

பா. பற்குணன்
சிரேஸ்ட உதவிக் கணக்காய்வாளர் தலைமை அதிபதி
கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்காக

04. செயலாற்றுகை சுட்டிகள்

உலக உணவுத்திட்டத்தின் கீழ் 21 பயனாளிகளுக்கான கோழிக்கூடுகள் வழங்கி வைக்கப்பட்டன.

- 7022 குடும்பங்களுக்கு உணவுப்பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.
- 23 நீர் சுத்திகரிப்புத்திட்டங்கள்
- 75 வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டன.
- சௌபாக்கியா திட்டத்தின் கீழ் 50 பயனாளிகளுக்கான கோழிக்கூடுகள் வழங்கி வைக்கப்பட்டன.
- ஜப்பானிய அரச நிதி உதவியின் கீழ் 1250 பயனாளிகளுக்கான கோழிக்கூடுகள் வழங்கி வைக்கப்பட்டன.
- 12,052 மில்லியன் பெறுமதியான நீர் இணைப்புக்கள் வழங்கி வைக்கப்பட்டன.
- காடாக்கல் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன.

4.1 நிறுவனத்தின் செயலாற்றுகைச் சுட்டிகள்

குறியீட்டுசுட்டிகள்	எதிர்பார்த்தவெளியீட்டின்சதவீதமாக (மூ) உண்மையானவெளியீடு		
	100% - 90%	75% - 89%	50% - 74%
உலக உணவுத்திட்டத்தின் கீழ் 21 பயனாளிகளுக்கான கோழிக்கூடுகள் வழங்கி வைக்கப்பட்டன.		√	
7022 குடும்பங்களுக்கு உணவுப்பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.		√	
23 நீர் சுத்திகரிப்புத்திட்டங்கள்		√	
75 வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டன.		√	
சௌபாக்கியா திட்டத்தின் கீழ் 50 பயனாளிகளுக்கான கோழிக்கூடுகள் வழங்கி வைக்கப்பட்டன.		√	
ஜப்பானிய அரச நிதி உதவியின் கீழ் 1250 பயனாளிகளுக்கான கோழிக்கூடுகள் வழங்கி வைக்கப்பட்டன.		√	
12,052 மில்லியன் பெறுமதியான நீர் இணைப்புக்கள் வழங்கி வைக்கப்பட்டன.		√	
காடாக்கல் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன.		√	

05. பேண்தகு அபிவிருத்தி இலக்குகள்

5.1 அடையாளம் காணப்பட்ட பேண்தகு அபிவிருத்தி இலக்குகள்

இல	இலக்குகள்	
1	இலக்கு - 1	எல்லா இடங்களிலும் அனைத்து வடிவங்களிலுமுள்ள உள்ள வறுமையை ஒழித்தல்
2	இலக்கு - 2	நிலைபேறான விவசாயத்தை முன்னிறுத்தி பசியை ஒழித்து உணவுப்பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்தினை மேம்படுத்தல்
3	இலக்கு - 4	அனைவரும் உள்ளடக்கிய சமத்துலமான கல்வியையும் கற்றல் சந்தர்ப்பத்தினையும் உறுதி செய்தல்
4	இலக்கு - 4	பால்நிலை சமத்துவத்தை அடைவதுடன் அனைத்து பெண்களையும் சிறுமிகளையும் வலுப்படுத்தல்
5	இலக்கு - 6	நிலைபேறான முகாமைத்துவத்தினூடாக நீர் மற்றும் சுகாதார வசதிகளை அனைவருக்கும் உறுதி செய்தல்
6	இலக்கு - 11	உள்ளடக்கமான பாதுகாப்பான உறுதியான மற்றும் நிலைபேறான நகரங்களையும் குடியிருப்புக்களையும் உருவாக்கல்
7	இலக்கு - 15	சூழலியலின் நிலையான பயன்பாட்டினை பாதுகாத்தல்,மீளமைத்தல்,முன்னிறுத்தல்,மற்றும் காடுகளை நிலைபேறாக முகாமை செய்வதுடன் பாலைவனமாதல் மற்றும் நிலம் தரமிழத்தலை தடுப்பதற்கும் மாற்றுவதற்கும் போராடுவதுடன் உயிர்பல்வைகத்தன்மையின் இழப்பினை நிறுத்தல்

5.2. பேண்தகு அபிவிருத்தி இலக்குகளின் அடைவுகள் மற்றும் சவால்கள்

இலக்கு/குறிக்கோள்	அடைவுகள்	குறிகாட்டிகள்	முன்னேற்றம்		
			0% - 49%	50 % - 74 %	75%- 100 %
இலக்கு -1 எல்லா இடங்களிலும் அனைத்து வடிவங்களிலுமுள்ள உள்ள வறுமையை ஒழித்தல்					
பாடசாலை மாணவர்களுக்கு உணவு வழங்குதல் மூலம் அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்யக்கூடிய வசதியினை ஏற்படுத்திக் கொடுத்தல்	மாவட்டத்தில் போசாக்கு குறைபாடுள்ள மாணவர்களை இனங்கண்டு அவர்களுக்கு உணவளித்தல்.	உலக உணவுத் திட்டத்தின் கீழான தேசிய ரீதியில் பாடசாலை மாணவர்களுக்கு உணவு வழங்கும் வழங்கும் நிகழ்ச்சி திட்டத்திற்காக 21 பயனாளிகளுக்கு கோழிக்கூடுகளிற்கான நிதி வழங்கி வைக்கப்பட்டுள்ளது.		✔	
வறுமையை குறைப்பதன் மூலம் ஏழைகள் மற்றும் பாதிக்கப்பட்டோரின் சமூக பாதுகாப்பை உறுதி செய்தல்.	மாவட்டத்தில் வறுமையினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களில் 60 வீதமானோருக்கு உலருணவு வழங்கல்	உலக உணவுத் திட்டத்தின் கீழான குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களுக்கு உணவு வழங்கும் நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் 7022 குடும்பங்களுக்கு உணவுப்பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.			✔
இலக்கு -2 நிலைபேறான விவசாயத்தை முன்னிறுத்தி பசியை ஒழித்து உணவுப்பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்தினை மேம்படுத்தல்					
உணவுப்பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்தினை மேம்படுத்தும் நோக்குடன் முட்டை உற்பத்தியை மேற்கொண்டு வருமானத்தை அதிகரித்தல்.	மாவட்டத்தில் வறுமையினால் பாதிக்கப்பட்ட 70 வீதமானோருக்கு வாழ்வாதார உதவிகளை வழங்கல்	சௌபாக்கிய உற்பத்தி கிராம நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்திற்குட்பட்ட 50 பயனாளிகளுக்கான கோழிக்கூடுகள் வழங்கி வைக்கப்பட்டது.		✔	
உணவுப்பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்தினை மேம்படுத்தும் நோக்குடன் முட்டை உற்பத்தியை மேற்கொண்டு வருமானத்தை அதிகரித்தல்.	மாவட்டத்தில் வறுமையினால் பாதிக்கப்பட்ட 70 வீதமானோருக்கு வாழ்வாதார உதவிகளை வழங்கல்	ஜப்பானிய அரச நிதியுதவியின் கீழ் 4 பிரதேச செயலக பிரிவுகளிலுமுள்ள 1250 குடும்பங்களுக்கு			✔

		கோழிக்கூடுகள் வழங்கி வைக்கப்பட்டன.	
விவசாயத்தை முன்னிறுத்தி நிலைபேறான அபிவிருத்தியை முன்னெடுக்கும் பொருட்டு விவசாய உபகரணம் வழங்குதல்	மாவட்டத்தில் விவசாயத்தில் ஈடுபடும் விவசாயிகளில் 60 வீதமானோரை ஊக்குவித்தல்.	ஜப்பானிய அரச நிதியுதவியின் கீழ் விவசாய உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டது.	✔
இலக்கு -4 **அனைவரும் உள்ளடக்கிய சமத்துலமான கல்வியையும் கற்றல் சந்தர்ப்பத்தினையும் உறுதி செய்தல்**			
பாடசாலை செல்லாத பிள்ளைகளை பள்ளிக்கு இணைத்தல்	"மாவட்டத்தில் 94 பாடசாலை செல்லாத பிள்ளைகளை மீண்டும் பள்ளிக்கு இணைத்தல். "	புதிய கிராமம் புதிய நாடு வேலைத்திட்டத்தின் கீழ் 98 மாணவர்கள் மீள் இணைக்கப்பட்டுள்ளனர்.	✔
இலக்கு -5 **பால்நிலை சமத்துவத்தை அடைவதுடன் அனைத்து பெண்களையும் சிறுமிகளையும் வலுப்படுத்தல்**			
பெண் சமூக தொழில் முனைவோரை ஊக்குவித்து சந்தைப்படுத்தல் வலையமைப்பு மற்றும் தொடர்புகளை ஏற்படுத்திக் கொடுத்தல்.	மாவட்டத்தில் சந்தைப்படுத்தல் வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்	ஜப்பானிய அரச நிதியுதவியின் கீழ் இரு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட தொழில் முனைவோருக்கு வலையமைப்பை ஏற்படுத்தி கொள்வதற்கான நிதி வசதி வழங்கி வைக்கப்பட்டது.	✔
இலக்கு -6 **நிலைபேறான முகாமைத்துவத்தினூடாக நீர் மற்றும் சுகாதார வசதிகளை அனைவருக்கும் உறுதி செய்தல்**			
சுகாதார வசதிகளை மேம்படுத்துவதன் மூலம் அனைவருக்கும் சுகாதார வசதி கிடைப்பதை உறுதிப்படுத்தல்	மாவட்டத்தின் 70 வீதமான சுகாதார வசதிகளை மேம்படுத்தல்	UNDP நிறுவன நிதி அனுசரனையுடன் நடமாடும் சுகாதார சேவை வழங்கலும் சட்ட ரீதியான ஆவணங்களை பெற்று கொள்ளல் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம் இரு பிரதேச செயலக பிரிவுகளில் மேற்கொள்ளப்பட்டது.	✔
நீரியல் வளங்களின் தரம்,நீரின் தரக்குறைவு, நீர் விநியோக பற்றாக்குறை என்பவற்றை கருத்தில் கொள்ளுதல் மூலம் நிலைபேறான முகாமைத்துவத்தை அடைய முயற்சி செய்தல்.	மாவட்டத்தின் 70 வீதமான நீர் வசதிகளை மேம்படுத்தல்	வீடமைப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சினால் 4 பிரதேச செயலாளர் பிரிவிலும் 23 நீர் சுத்திகரிப்பு திட்டங்கள் அமுல்படுத்தப்படுகின்றன.	✔

நீரியல் வளங்களின் தரம்,நீரின் தரக்குறைவு, நீர் விநியோக பற்றாக்குறை என்பவற்றை கருத்தில் கொள்ளுதல் மூலம் நிலைபேறான முகாமைத்துவத்தை அடைய முயற்சி செய்தல்.	மாவட்டத்தின் 70 வீதமான நீர் வசதிகளை மேம்படுத்தல	பிரஜா ஜாலா அபிமாணி நீர் வழங்கல் திட்டத்தின் கீழ் இரு பிரதேச செயலக பிரிவுகளுக்கும் 12.052 மில்லியன் ஒதுக்கிடப்பட்டுள்ளது.	✔
இலக்கு -11 **உள்ளடக்கமான பாதுகாப்பான உறுதியான மற்றும் நிலைபேறான நகரங்களையும் குடியிருப்புக்களையும் உருவாக்கல்**			
மனித குடியிருப்புக்கள் அமைத்துக் கொடுத்தல்	மாவட்டத்தில் 500 வீடுகளை அமைத்துக் கொடுத்தல்	நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சினால் 75 வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டன.	✔
இலக்கு -15 **சூழலியலின் நிலையான பயன்பாட்டினை பாதுகாத்தல்,மீளமைத்தல்,முன்னிறுத்தல்,மற்றும் காடுகளை நிலைபேறாக முகாமை செய்வதுடன் பாலைவனமாதல் மற்றும் நிலம் தரமிழத்தலை தடுப்பதற்கும் மாற்றுவதற்கும் போராடுவதுடன் உயிர்பல்வைகத்தன்மையின் இழப்பினை நிறுத்தல்**			
காடாக்கல் திட்டத்தை நடைமுறைப்படுத்தல்	மாவட்டத்தில் 5 காடாக்கல் திட்டத்தை நடைமுறைப்படுத்தல்	புதிய கிராமம் புதிய நாடு வேலைத்திட்டத்தின் கீழ் 03 காடாக்கல் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன.	✔

06. மனித வள விபரம்

6.1 பதவியணி முகாமைத்துவம்

மாவட்ட செயலகம்

பதவி நிலை	அங்கீகரிக்கப்பட்ட பதவியணி	தற்போதுள்ள பதவியணி	பதவி வெற்றிடம்
சிரேட்ட	13	10	3
மூன்றாம் நிலை	4	3	1
இரண்டாம் நிலை	78	145	-67
ஆரம்ப நிலை	28	22	6

பிரதேச செயலகங்கள்

பதவி நிலை	அங்கீகரிக்கப்பட்ட பதவியணி	தற்போதுள்ள பதவியணி	பதவி வெற்றிடம்
சிரேட்ட	16	14	2
மூன்றாம் நிலை	12	5	7
இரண்டாம் நிலை	347	398	-51
ஆரம்ப நிலை	34	25	9

6.2 மனித வள அபிவிருத்தி

மனிதவள பற்றாக்குறை காரணமாக வேலைகளை அலுவலர்களிடையே பகிர்ந்தளிப்பது சிரமங்கள் ஏற்படுவதுடன் வேலைகளில் தாமதங்களும் ஏற்படுகின்றன. இதனால் கூடுதலான மேலதிக நேரக்கொடுப்பனவுக்கு அதிக நிதி ஒதுக்கீட்டினை பயன்படுத்தப்பட வேண்டியுள்ளது.

தொ. இல	நிகழ்ச்சியின் பெயர்	பயனாளிகள்	செலவு
1	தொழிற்சந்தை	479	
2	கல்விசார் தொழிற்சந்தை	392	50000
3	க.பொ.தசாதாரண மாணவர்களுக்கான தொழில் வழிகாட்டல்	196	
4	தொழில் தேடுநர்களை பதிவு செய்தல்	206	
5	நிறுவனங்களை பதிவு செய்தல்	64	
6	தொழில் வெற்றிடங்களை பதிவு செய்தல்	402	
7	தொழில் தேடுநர்களை தொழிலில் இணைத்தல்	144	
8	தொழில் வழிகாட்டல் ஆலோசனை மேற்கொண்டமை	206	
9	தொழிற் பயிற்சிநெறியில் இணைத்தமை	88	
10	தொழில் முயற்சியாளர்களை இணைத்தமை	26	
11	வேலை தடுபவர்களுக்கான வேலை பரிந்துரை	689	
12	சுயதொழில் மேற்கொள்வதற்கான வழிகாட்டல்	55	
13	ஆசிரியர்களைவிழிப்பூட்டும் நிகழ்ச்சி	21	
14	வெளிநாட்டு வேலைவாய்ப்பு தொடர்பான விழிப்பூட்டல்	26	15000
15	பாடசாலையில் இருந்து விலகியவர்களுக்கான வழிகாட்டல் நிகழ்ச்சி	23	
16	தொழிற் கல்வியில் ஆர்வத்தினை ஏற்படுத்துவதற்காக உயர்தர மாணவர்களை ஜேர்மன் தொழில்நுட்பக் கல்லூரிக்கு அழைத்து சென்றமை	62	32000
17	தொழிற்பயிற்சியை நிறைவு செய்தவர்களை தொழிலில் இணைத்தமை	2	
18	தொழில் அங்கீகார சான்றிதழ் பெற்றமை	37	
19	அலுவலர்களின் திறன்களை மேன்படுத்துவதற்கான நிகழ்ச்சி	13	

07. இணக்கப்பாட்டு அறிக்கைகள்

இல	ஏற்புடைய தேவைப்பாடு	இணக்கப்பாட்டு நிலமை	இணக்க மற்றதாயின் சுருக்கமாக விளக்குக	எதிர்காலத்தில் இணக்க மற்றதனை தவிர்ப்பதற்கு முன்மொழியும் சரியான நடவடிக்கையானது
1	**நிதி அறிக்கைகள் / கணக்குகள் சமர்ப்பிப்பு**			
1.1	வருடாந்த நிதி அறிக்கைகள்	உரிய திகதிக்கு முன்பாக சமர்ப்பிக்கப்பட்டது		
1.2	அரச அலுவலர்கள் முற்பணக்கணக்கு	உரிய திகதிக்கு முன்பாக சமர்ப்பிக்கப்பட்டது		
1.3	வணிக மற்றும் உற்பத்தி முற்பணக்கணக்குகள் வர்த்தக முற்பணக்கணக்குகள்	பொருத்தமற்றது		
1.4	களஞ்சிய முற்பணக்கணக்கு	பொருத்தமற்றது		
1.5	சிறப்பு முற்பணக்கணக்கு	பொருத்தமற்றது		
1.6	ஏனைய			
2	**புத்தகங்கள் பதிவேடுகளை பேணல் (நி.பி 445)**			
2.1	பொது நிர்வாக சுற்றறிக்கை 267/2018 இன்படி நிலையான சொத்து பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்.	பேணப்படுகின்றது		
2.2	ஆள்சார் வேதனாதிகள் பதிவு/தனிப்பட்ட ஊதிய அட்டைகளை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்.	பேணப்படுகின்றது		
2.3	கணக்காய்வு வினாக்கள் பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	பேணப்படுகின்றது		
2.4	உள்ளகக்கணக்காய்வு அறிக்கைகள் பதிவைப்புதுப்பித்தல் மற்றும்பராமரித்தல்.	பேணப்படுகின்றது		
2.5	அனைத்து மாதாந்த கணக்கு சுருக்கங்களையும் (சிகாஸ்) தயார் செய்து பொது திறைசேரிக்கு உரிய திகதியில் சமர்ப்பித்தல்.	உரிய திகதிக்கு முன்பாக சமர்ப்பிக்கப்பட்டது.		

2.6	காசோலை மற்றும் காசுக்கட்டளை பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்.	பேணப்படுகின்றது
2.7	பொருட்பதிவேட்டினை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்.	பேணப்படுகின்றது
2.8	இருப்புப்பதிவேட்டினை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்.	பேணப்படுகின்றது
2.9	இழப்புப்பதிவேட்டினை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்.	பேணப்படுகின்றது
2.10	பொறுப்புப்பதிவேட்டினை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்.	பேணப்படுகின்றது
2.11	அடிக்கட்டை புத்தகங்களின் (GAN-20) புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்.	பேணப்படுகின்றது
3	**நிதிக்கட்டுப்பாட்டுக்கான பணிகளை ஒப்படைத்தல்(நி.பி135)**	
3.1	நிதி அதிகாரங்கள் நிறுவனத்திற்குள் பகிரப்பட்டுள்ளன.	ஆம்
3.2	நிதி அதிகாரங்கள் பகிரப்படுகின்றமை பற்றி நிறுவனத்திற்குள் தெரியப்படுத்தப்பட்டது.	ஆம்
3.3	ஒவ்வொரு கொடுக்கல் வாங்கல்களும் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட அலுவலர்கள் மூலம் இடம்பெறும் வகையில் அதிகாரம் ஒப்படைக்கப்பட்டது.	ஆம்
3.4	2014.05.11 திகதிய அரச கணக்கு சுற்றறிக்கை இல:171/2004ன் படி அரசு ஊதிய மென்பொருள் தொகுப்பின் செயல்பாடுகள் கணக்காளரின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டவை.	ஆம்
4	**வருடாந்த திட்டம் தயாரித்தல்.**	
4.1	வருடாந்த கொள்முதல் திட்டம் தயாரித்தல்.	உரிய திகதிக்கு முன்பாக சமர்ப்பிக்கப்பட்டது.
4.2	வருடாந்த செயற்பாட்டுத்திட்டம் தயாரித்தல்.	உரிய திகதிக்கு முன்பாக சமர்ப்பிக்கப்பட்டது.
4.3	வருடாந்த உள்ளகக்கணக்காய்வுத் திட்டம் தயாரித்தல்.	உரிய திகதிக்கு முன்பாக சமர்ப்பிக்கப்பட்டது.
4.4	வருடாந்த மதிப்பீட்டைத் தயாரித்தல் மற்றும் அதை தேசியவ.செ.தி திணைக்களத்துக்கு உரிய திகதிகளில் சமர்ப்பிக்கப்படுகின்றது.	உரிய திகதிக்கு முன்பாக சமர்ப்பிக்கப்பட்டது.

4.5	வருடாந்த காசுப்பாய்ச்சல் அறிக்கை திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களத்துக்கு உரிய திகதிகளில் சமர்ப்பிக்கப்படுகின்றது.	உரிய திகதிக்கு முன்பாக சமர்ப்பிக்கப்பட்டது.
5	**கணக்காய்வு வினாக்கள்**	
5.1	அனைத்து கணக்காய்வு வினாக்களுக்கும் கணக்காய்வாளர் நாயகத்துக்கு குறிப்பிட்ட திகதிகளில் பதில் அளிக்கப்பட்டுள்ளது.	உரிய திகதிக்கு முன்பாக சமர்ப்பிக்கப்பட்டது.
6	**உள்ளகக்கணக்காய்வு**	
6.1	நி.பி134 (2) டி.எம.ஏ1-2019படி ஆண்டின் தொடக்கத்தில் கணக்காய்வாளர் நாயகத்துடன் கலந்தாலோசித்த பின்னர் உள்ளகக்கணக்காய்வு திட்டம் தயாரித்தல்.	ஆம்
6.2	அனைத்து உள்ளகக்கணக்காய்வு அறிக்கைகளுக்கும் ஒரு மாதத்திற்குள் பதிலளித்தல்.	உரிய திகதிக்கு முன்பாக சமர்ப்பிக்கப்பட்டது.
6.3	அனைத்து உள்ளகக்கணக்காய்வு அறிக்கைகளின் நகல்களையும் 2018 இன் 19ஆம் இலக்க தேசியகணக்காய்வு சட்டத்தின் துணைப்பிரிவு 40 (4) இன் அடிப்படையில் கணக்காய்வாளர் நாயகத்துக்கு சமர்ப்பித்தல்.	உரிய திகதிக்கு முன்பாக சமர்ப்பிக்கப்பட்டது.
6.4	அனைத்து உள்ளக கணக்காய்வு அறிக்கைகளின் நகல்களையும் 134(3) நிதிப்பிரமாணக்குறிப்பின் அடிப்படையில் கணக்காய்வாளர் நாயகத்துக்கு வழங்குதல்.	உரிய திகதிக்கு முன்பாக சமர்ப்பிக்கப்பட்டது.
7	**கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக்குழு**	
7.1	டிஎம்ஏ1-2019 சுற்றறிக்கையின் படி ஆண்டுக்குக்குறைந்தது 04கணக்காண்டு மற்றும் முகாமைத்துவக் குழுக்கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன.	ஆம்
8	**சொத்து முகாமைத்துவம்**	
8.1	ஆதன முகாமைத்துவ சுற்றிக்கை இல 01/2017 சொத்துப்பெறுகை முற்றும் அகற்றல் பற்றிய தகவல்களை கம்ப்ரோலர்ஜனரல் அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்பட	பேணப்படுகின்றது

	வேண்டும்.	
8.2	மேற்கண்ட சுற்றறிக்கையின் 13ஆம் அத்தியாயத்தின் படி சுற்றறிக்கையின் விதிகளை அமுல்படுத்துவதற்கும் அத்தகைய அதிகாரியை கம்ப்ரோலர்ஜனரல் அலுவலகத்திற்கு அனுப்புவதற்கும் பொருத்தமானதொரு தொடர்பு அதிகாரி நியமிக்கப்பட்டுள்ளார்.	பேணப்படுகின்றது
8.3	அரச நிதிசுற்றறிக்கை இல05/2016 இன்படி பொருட்கள் கணக்கெடுக்கப்பட்டு தொடர்புடைய அறிக்கைகள் கணக்காய்வாளர் நாயகத்திற்கு உரிய திகதிகளில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.	உரிய திகதிக்கு முன்பாக சமர்ப்பிக்கப்பட்டது.
8.4	சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்ட கால கட்டத்தில் வருடாந்த கணக்கெடுப்பு மூலம் அதிகப்படியான குறைபாடுகள் மற்றும் பிற பரிந்துரைகள் செய்யப்பட்டுள்ளன.	இல்லை
8.5	நி.பி772 இன்படி கழிக்கப்பட்ட பொருட்களை அகற்றுதல் இடம்பெற்றது.	ஆம்
9	**வாகன முகாமைத்துவம்**	
9.1	குழும வாகனங்களுக்கான தினசரி இயக்க அறிக்கை மற்றும் மாதாந்த சுருக்க அறிக்கைகளைத் தயாரித்து அவற்றை உரிய திகதியில் கணக்காய்வாளர் நாயகத்துக்கு சமர்ப்பித்தல்.	பேணப்படுகின்றது
9.2	கழிப்பனவு செய்யப்பட்ட வாகனங்கள் கழிப்பனவு செய்யப்பட்டு ஆறு மாதங்களுக்குள் அகற்றப்படுதல் வேண்டும்.	பேணப்படுகின்றது
9.3	வாகன பதிவு புத்தகங்கள் பராமரிக்கப்படுவதுடன் புதுப்பிக்கப்படுதல் வேண்டும்.	பேணப்படுகின்றது
9.4	ஒவ்வொரு வாகன விபத்தும் நி.பி103, 104,109மற்றும்110இன்படி நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.	பேணப்படுகின்றது
9.5	2016.12.29 திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை இல2016.̇.30 இன்பத்தி3.1இன் விதிகளின் படி வாகனங்களின் எரிபொருள்	பேணப்படுகின்றது

	பாவனையினை மீண்டும் பரிசீலித்தல்.	
10	**வங்கிக் கணக்குகளின் முகாமை**	
10.1	உரிய திகதிகளில் வங்கிக் கணக்கிணங்க அறிக்கைகளைத் தயாரித்து சான்றழித்தல் மற்றும் கணக்காய்வுக்கு சமர்ப்பித்தல்	உரிய திகதிக்கு முன்பாக சமர்ப்பிக்கப்பட்டது.
10.2	மீளாய்வு வருடத்தில் காணப்பட்ட செயற்படாத வங்கிக் கணக்குகளினைத் தீர்த்தல்	பொருத்தமற்றது
10.3	வங்கிக் கணக்கிணக்க அறிக்கையில் வெளிப்படுத்தப்பட வேண்டிய நிலுவைகளை வெளிப்படுத்தல் மற்றம் சரி செய்தல் மற்றும் ஒரு மாதத்திற்குள் அத்தகைய நிலுவைகளை தீர்த்தல்	உரிய திகதியில் என்னால் சீர் செய்யப்பட்டது
11	**நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்தல்.**	
11.1	ஒதுக்கீடு செய்யப்பட்ட ஏற்பாடுகளை வரையறைகளை மீறாதபடி செலவிடல்	பேணப்படுகின்றது
11.2	நி.பி94(1) இன்படி ஒதுக்கீட்டு வரம்பை மீறாத பொறுப்புக்கள் வருட இறுதியில் தொடர்ந்திருக்கும்	பேணப்படுகின்றது
12	**அரச அலுவலர்களின் முற்பணப்பணக்கு**	
12.1	எல்லைகளுக்கு இணங்குதல்	பேணப்படுகின்றது
12.2	நிலுவையிலுள்ள கடன் நிலுவை குறித்து சரியான நேரத்தில் பகுப்பாய்வு செய்திருத்தல்	பேணப்படுகின்றது
12.3	ஒரு வருடத்திற்கும் மேலாக நிலுவையில் உள்ள கடன்களை அடைத்தல்	ஆம்
13	**பொதுவைப்புக்கணக்கு**	
13.1	காலம் பிந்திய வைப்புக்களை அகற்றுவதற்கு நி.பி571 பிரகாரம் நடவடிக்கை எடுத்தல்.	ஆம்
13.2	பொதுவைப்புக்களுக்கான கட்டுப்பாட்டு கணக்கை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்.	பேணப்படுகின்றது

14	**முற்பணக்கணக்கு**	
14.1	மீளாய்வு ஆண்டின் இறுதியில் காசுப்புத்தகத்தின் மீதி திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது.	உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டது
14.2	நி.பி371இன் அடிப்படையில் தற்செயலான இடைக்கால வழங்கல்,அத்தகைய பணி நிறைவடைந்து மாதத்திற்குள் தீர்க்கப்படும்.	உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டது
14.3	நி.பி371இன் படி அங்கீகரிக்கப்பட்ட வரம்பை மீறாததற்காலிக இடைக்கால வழங்கல்.	
14.4	மாதந்தோறும்திறைசேரிபுத்தகங்களுடன்கணக்குமீதிகணக்கிணக்கம்செய்யப்படுதல்வேண்டும்.	பேணப்படுகின்றது
15	**வருமானக்கணக்கு**	
15.1	விதிகளின்படி சேகரிக்கப்பட்ட வருமானத்தை திருப்பி செலுத்தியிருக்க வேண்டும்.	ஆம்
15.2	திரட்டப்பட்ட வருமானம் வைப்புக்கணக்கில் வரவுவைக்காமல் நேரடியாக வருமானத்திற்கு வரவு வைக்கப்பட வேண்டும்.	ஆம்
15.3	நி.பி176 இன்படி நிலுவைத் தொகையை கணக்காய்வாளர் நாயகத்திற்குச் சமர்ப்பித்தல்.	ஆம்
16	**மனித வள முகாமைத்துவம்**	
16.1	அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களின் எல்லைக்குள் பணியாளர்களைப் பராமரித்தல்.	பேணப்படுகின்றது
16.2	ஊழியர்களின் அனைத்து உறுப்பினர்களுக்கும் கடமைகளின் எழுதப்பட்ட பட்டியல்களை வழங்குதல்.	பேணப்படுகின்றது
16.3	20.09.2017 தேதியிடப்பட்ட எம்.எஸ்.டி சுற்றறிக்கை இல04/2017 இன்படி அனைத்து அறிக்கைகளும்	உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டது

	முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.	
17	**பொது மக்களுக்கான தகவல் வழங்கல் ஆகியவற்றின் பொறுப்பில் ஒரு மூத்த அதிகாரியை நியமித்தல்.**	
17.1	தகவல் உரிமைச்சட்டம் மற்றும் ஒழுங்கு முறைகளின் அடிப்படையில் தகவல் அதிகாரி ஒருவரை நியமித்தல்.	பேணப்படுகின்றது
17.2	அமைப்பு பற்றிய தகவல்களை அதன் வலைத்தளத்தின் மூலம் வழங்குதல் மற்றும் வலைத்தளம் அல்லது மாற்று வழிகள் வழியாக நிறுவனத்தின் மீதான பொதுக் கருத்துக்கள்/குற்றச் சாட்டுக்களை எளிதாக்குதல்.	ஆம்
17.3	தகவல் அறியும் உரிமைச்சட்டத்தின் 8மற்றும்10 பிரிவுகளின் படி ஆண்டுக்கு இரண்டு அல்லது ஒரு முறை அறிக்கைகளை சமர்ப்பித்தல்.	ஆம்
18	**பிரசைகள் பட்டயத்தினைச் சமர்ப்பித்தல்.**	
18.1	பொது நிர்வாகம் மற்றும் முகாமைத்துவ சுற்றறிக்கை இல 05/2018(1)இன்படி பிரசைகள் வாடிக்கையாளர் சாசனத்தை உருவாக்குதல் மற்றும் செயற்படுத்தல்.	ஆம்
18.2	சுற்றறிக்கையின் பந்தி2.3ஐப் பொறுத்தவரை பிரசைகள் பட்டயம் பிரசைகள் வாடிக்கையாளர் சாசனத்தை செயல்படுத்தவும் அதை கண்காணிக்கவும் மதிப்பீடு செய்யவும் நிறுவனம் ஒரு பொறி முறையை அமைத்துள்ளது.	ஆம்
19	**மனித வளத்திட்டத்தினைத் தயாரித்தல்**	
19.1	2018.01.24 திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை இல02/2018இன் இணைப்பு02 படிவத்தின் அடிப்படையில் மனித வளத்திட்டம் தயாரித்தல்.	ஆம்

19.2	ஊழியர்களின் ஒவ்வொரு உறுப்பினருக்கும் குறைந்த பட்சம் 12மணி நேரபயிற்சி ஆண்டுக்கு 12 மணி நேரத்திற்கும் குறையாமல் இருப்பதை மேற் கண்ட மனித வளத்திட்டம் உறுதி செய்ய வேண்டும்.	ஆம்
19.3	மேற்கண்ட சுற்றறிக்கையின் இணைப்பு 01இல் கொடுக்கப்பட்டுள்ள படிவத்தின் அடிப்படையில் அனைத்து ஊழியர்களுக்கும் வருடாந்த செயற்திறன் ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டுள்ளது.	ஆம்
19.4	மேற்கண்ட சுற்றறிக்கையின் 6.5வது பந்திக்கு எற்ப மனிதவள மேம்பாட்டுத்திட்டம், திறன் மேம்பாட்டுத் திட்டங்கள் மற்றும் திறன் மேம்பாட்டுத்திட்டங்களை செயற்படுத்தல்.	ஆம்
20	**கணக்காய்வு பந்திகளுக்கான பொறுப்புக்கள்**	
20.1	முந்தைய ஆண்டிற்கான கணக்காய்வாளர் நாயகத்தின் கணக்காய்வு பந்திகளால் சுட்டிக் காட்டப்பட்ட குறைபாடுகளை சரி செய்தல்.	சீர் செய்யப்பட்டுள்ளது

நலனுதவிக் கொடுப்பனவுநான்குபிரதேசசெயலகபிரிவுகளுக்கும் பின்வருமாறுவழங்கப்பட்டிருந்தது.



දිස්ත්‍රික් ලේකම් කාර්යාලය - කිලිනොච්චිය

மாவட்ட செயலகம் - கிளிநொச்சி

District Secretariat - Kilinochchi